வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk | மலர் : 03 | 15.03.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 100 | பக்கங்கள் : 16


# தீவிரவாத தாக்குதல்கள் இலங்கையில் நடக்கலாம்!

## இங்கிலாந்து அரசாங்கம் எச்சரிக்கை

லண்டன், மார்ச் 15

**இலங்கையில் தீவிரவாத தாக்குதல்கள் நடக்கலாம் என்று இங்கிலாந்து அரசாங்கம் தனது நாட்டு மக்களுக்கு விடுத்த பயண எச்சரிகையில் தெரிவித்துள்ளது.**

இந்தத் தாக்குதல் ஈஸ்டர் குண்டு வெடிப்பைப் போலவே இருக்கலாம் என்றும் அது கூறியுள்ளது. ஈஸ்டர் தாக்குதலில் அரசாங்கத்தின் ஈடுபாடு காரணமாக யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் அந்த அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், அந்த பயண எச்சரிக்கையில், இலங்கையில் சமூகத்தில் கோவிட் - 19 பாதிப்பு அதிகமாக இருக்கின்றது. இதனால், குறுகிய அறிவிப்புகளுடன் விமானங்கள் மற்றும் விமான நிலைய செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படலாம். பாதிக்கப்பட்ட பகுதிகளில் முடக்கங்கள் - பயணக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்படலாம்.

15

# பேனா, பென்சில் விலை ஐந்து ரூபாவால் உயர்வு!

கொழும்பு, மார்ச் 15

பேனா மற்றும் பென்சில் ஆகியவற்றின் விலைகள் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதன் விற்பனையாளர் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அச்சிடுவதற்கான காகிதம் மற்றும் மூலப்பொருட்களிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

காகிதம் மற்றும் மூலப்பொருட்களின் விலை 3 மடங்கினால் சந்தையில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் புத்தக வெளியீட்டாளர்களும் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி

15

# அமைச்சர் பஸிலுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை!

கொழும்பு, மார்ச் 15

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சிக்குள் தற்போது கலந்துரையாடப் பட்டு வருகின்றது, சஜித் தலைமையில் நடைபெறவுள்ள உயர்மட்ட கூட்டத்தின் பின்னர் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப் படவுள்ளது.

பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறாமை, நிதி நிலைவரம் பற்றி

15

# கூட்டமைப்பை இன்று ஜனாதிபதி சந்திப்பார்!

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் நடக்கும் இந்தச் சந்திப்பில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உறுதியாக உள்ளது. இதேநேரம், ரெலோ கட்சி சந்திப்பை புறக்கணிப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளது.

15

# பஸ் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது

## 17 ரூபாவாக இருந்த ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபாயாக உயர்வு

கொழும்பு, மார்ச் 15

புதிய பஸ் கட்டண அதிகரிப்புக்கு அமைய, 17 ரூபாயாக காணப்பட்ட ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று திங்கட்கிழமை இதுகுறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தற்போது ஆகக்கூடிய பஸ் கட்டணமாக இருந்த 1,303 ரூபா 1,498 ரூபாய் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொழும்பில் கூடுகிறது

## ரெலோ புறக்கணிக்கும்?

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதியுடனான பேச்சு தொடர்பில் முடிவு எடுக்கவும் - பேச்சின் போது உரையாடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கொழும்பில் கூடிப் பேசவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறும் இந்த சந்

15

# மின்வெட்டு நேரத்தை குறைத்தது மின்சார சபை

கொழும்பு, மார்ச் 15

களனிதிஸ்ஸ உள்ளிட்ட அனல்மின் நிலையங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என கிடைத்த உத்தரவாதத்தின் காரணமாக இன்று நடைமுறைப்படுத்தப்படவிருந்த 7 மணித்தியால மின்வெட்டு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இன்று ஏ முதல் எல் வலயங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 வரை இரண்டு மணிநேரம் 30 நிமிடங்களும் மாலை 6 மணி முதல் 11 மணி

15

# இருப்பை தக்க வைக்கும் அரசின் முயற்சி தோல்வி

## கூறுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, மார்ச் 15

"தேசிய அரசமைப்பது தொடர் பில் விடுக்கப்பட்ட அழைப்பை ரணில் விக்கிரமசிங்க நிராகரித்து விட்டார். எனவே, அரசின் முயற்சி தற்போது தோல்வியில் முடிவடைந்துள்ளது." - என்று பிவிருது ஹெல உறுமய கட்சியின் தலைவரான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு

15

# முடிந்தால் பொதுமக்கள் வரிசையில் நிற்கும் இடங்களுக்கு செல்லுங்கள்!

## அமைச்சர்களுக்கு எதிரணி சவால்



கொழும்பு, மார்ச் 15

முடிந்தால், எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு வரிசைகளில் மக்கள் நிற்கும் இடங்களுக்கு சென்று மக்களிடம் கருத்துக்களை கேட்டறியுமாறு அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு சவால் விடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வர்த்தமானி அறிவித்தலுக்கு பதிலாக குறுஞ் செய்திகள் மூலம் பொருட்களின் விலைகளை

15

## ஜனாதிபதியுடனான பேச்சு

# தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செல்வதே பலம்!

## கூட்டமைப்பின் பிளவில் மகிழ்ச்சியடைய முடியாது

சென்னை, மார்ச் 15

"ஜனாதிபதியுடனான பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுண்டு போகக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள 5 கட்சிகளும் இணைந்து செல்வதே பலமானது" என்று தெரிவித்துள்ள எம். கே. சிவாஜிலிங்கம், "இந்தியப் பிரதமர் வந்ததன் பின்னர் - இரு வாரங்களின் பின்னர் ஜனாதிபதியுடன் பேசுவதே சாதுரியமானது", என்றும் கூறியுள்ளார்.

15



# இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ரெலோ புறக்கணிக்கக் கோரியது சரியானதுதானா என்ற கருத்துப்பட நேற்றையதினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஜனாதிபதி - கூட்டமைப்பை சந்திப்புக்கு அழைத்திருக்கிறாரே தவிர, எந்த விடயத்தைக் குறித்து பேசுவதற்காக இந்தச் சந்திப்பு என்றும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த நாட்டில் இனப்பிரச்னை என்ற ஒன்றே இல்லை என்று தொடர்ந்து கூறிவருகின்ற ஒருவர் சந்திப்புக்கு அழைத்தால், நிச்சயமாக அவர் இனப்பிரச்னை பற்றி பேசுவதற்காக அழைத்திருக்க சந்தர்ப்பம் இல்லை.

சில நாட்களுக்கு முன்னர்தான் கூட்டமைப்பினர் ஜனாதிபதி செயலகம் முன்னால் காணி அபகரிப்புக்கு எதிராக 'முற்றுகைப்' போராட்டம் நடாத்தினார்கள். அன்று ஜனாதிபதியைச் சந்திக்க அவர்கள் முயன்றபோதிலும் அவர் சந்திக்கவில்லை. அதற்காகவும் இப்போது அழைத்திருக்கலாம்.

இன்றிருக்கும் பொருளாதார நெருக்கடியால், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை அறிந்துகொள்வதற்காகவும் இருக்கலாம்.

ஆனால், நேற்றைய இந்தப் பத்தியில், அது இனப்பிரச்னைக்கான பேச்சுவார்த்தையாக இருந்தாலும் கூட்டமைப்பு கலந்துகொள்ளவேண்டும் என்ற இந்தப் பத்தியின் கருத்தை படித்த நண்பர் ஒருவர், லண்டனிலிருந்து தொடர்புகொண்டார்.

அவர், ரெலோ அறிவித்ததை ஏற்றுக்கொள்கின்ற மனநிலையில் இருந்திருக்கிறார் என்பதை ஊகிக்க முடிந்தது.

அவருடைய விவாதம் எல்லாம், இப்போது நிலைமை சற்று நமக்கு சாதகமாகி வருவதாகத் தெரிகின்றதாம்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு கைகொடுத்து உதவ அண்டை நாடு என்ற கோதாவில் இந்தியா தயாராகிவருகின்றபோதிலும், அதற்கு பிரதியுபகாரமாக தனக்கு - தன் தனிப்பட தேவைகளை என்னவெல்லாம் கேட்கின்றது என்பது இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஆனால், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுக்கான வழிவரைபடத்தை முன்வையுங்கள் என்று இந்தியா கேட்டிருப்பதாகவும், அதனாலேயே கடன் வழங்கும் விவகாரம் தாமதமாகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில்தான், திடீரென்று ஜனாதிபதி தரப்பிலிருந்து கூட்டமைப்புக்கு அழைப்புக் கிடைத்திருக்கின்றது.

இந்த அழைப்பை ஏற்று கூட்டமைப்பு சந்திப்பில் கலந்துகொண்டால், இலங்கை தரப்பிலிருந்து, நாங்கள் தமிழர் பிரச்னைகள் தொடர்பாக தமிழர் தரப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறோம் என்று இந்தியாவுக்கு சொல்லப்படலாம்.

அதாவது இந்தியாவிற்கு, அதன் நிபந்தனைக்கு ஏற்றவாறு பதிலளிக்க இந்தச் சந்திப்பு உதவலாம்.

இந்தியாவின் கடனுதவி கிடைத்த பின்னரும் கூட்டமைப்புடன் இடையிடையே சந்திப்புக்களை நடாத்திக்கொண்டிருக்கலாம் என்று அரச தரப்பு கணக்கிட்டிருக்கலாம் என்பதே அந்த லண்டன் நண்பரின் ஊகமாக இருந்தது.

எனவே ரெலோ சொல்வது போல, ஜனாதிபதியிடமிருந்து ஓர் உத்தரவாதத்தை, ஆகக் குறைந்தது - இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு இனரீதியான பிரச்னைகள் உள்ளன என்பதையாவது அவர் ஏற்றுக்கொண்ட பின்னர்தான் அவரைச் சந்திக்கவேண்டும் என்று அவர் வாதிட்டார்.

'இது என்ன குழந்தைத் தனமான கதையாக இருக்கிறது. சந்திப்பு தொடங்கியதுமே, என்ன விடயத்துக்காக அழைத்திருக்கிறார் என்பது தெரியவந்துவிடும். அதன் பின்னர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அவர் முகத்திற்கு நேரே சொல்லிவிட்டு வெளியே வரவேண்டியதுதானே?' என்றேன் நான்.

'அதுதானே பிரச்னையே, அப்படிச் சொல்லுகின்ற திராணி சம்பந்தனுக்கோ அல்லது மற்றைய தலைவர்களுக்கோ இருக்கிறதா?' என்று கேட்டார் அவர்.

'புதிய அரசியலமைப்பு ஒன்றை முன்வைப்பேன் என்று நான் தேர்தலில் வாக்குறுதி வழங்கியிருக்கின்றேன். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டிருக்கின்றோம். நிச்சயம் அது வரும். அதுவரை பொறுத்திருங்கள் என்று ஜனாதிபதி கேட்டால், சம்பந்தன் சரி, நாங்களும் எங்கள் யோசனைகளை சமர்ப்பித்திருக்கின்றோம். அவையும் இடம்பெறுவதை உறுதி செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு எழுந்து வரப்போகின்றார்' என்றார் நண்பர்.

அரசாங்கம் இன்று தனது பங்காளிக்கட்சிகளோடு மல்லுக்கட்டிக்கொண்டு நிற்கின்றது.

போகின்ற போக்கைப் பார்த்தால், சாதாரண பெரும்பான்மையை தக்கவைக்கவே போராடவேண்டும்போல நிலைமை இருக்கும்போது, எப்படி அரசியலமைப்பு சாத்தியமாகும் என்று திரும்பிக் கேட்கக்கூடிய தலைவர்கள் நம்மத்தியில் இருந்தால் தானே? என்று அவர் சொல்லும்போதே இடைமறித்த நான், ஏன் அதனையே ரெலோவே செய்யலாம் தானே. அதற்காகத்தானே, கூட்டமைப்பின் எம்.பி.க்கள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு சம்பந்தன் ஐயா போகின்றார் என்று திரும்பிக்கேட்டேன்.

'அட நீங்கள் வேற.. அப்பிடிக் கேட்கக்கூடிய தெம்பு இல்லாததால் தானே, போகாமலே விடுவோம் என்கிறோம்' என்று கூறிவிட்டு தொடர்பை துண்டித்துக்கொண்டார் நண்பர்.

சந்திப்பு நடக்கும் இன்றைய தினம் காலை, கூட்டமைப்பின் எம்.பி.க்கள் எல்லோரும் கூடி, அங்கு பேசவேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவிருக்கின்றனர்.

நிச்சயம் அங்கிருக்கும் சிறிதரன் போன்ற கலகக்காரர்கள் பேசாமல் இருக்கமாட்டார்கள் என்று நம்புவோம்!

**- ஊர்க்குருவி**

---

யாழ்ப்பாணம், மார்ச் 15

அச்செழு வடக்கு அருள்மிகு வல்லியப்பர் சிவன் ஆலயப் புனராவர்த்தன அஷ்டபந்தன ஏககுண்டபட்ஷ மகா கும்பாபிஷேகம் வரும் வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

ஊரெழு மீனாட்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரதிஸ்டா பிரதமகுரு "வேத ஞான சுரபி " சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் இடம்பெறும்.

---

## சிறப்பு சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் செ.த. குமரன் "ஈழத்தில் முருக வழிபாட்டின் சிறப்புக்கள்" என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)

• • •

நாவலர் பெருமான் தொடர்பில் இளஞ்சிறாரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவு தொடரில், எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலையில் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, " நாவலர் பெருமானின் சமயப்பணி " என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், இடம்பெறவுள்ளன.

• • •

யாழ்ப்பாணம், மார்ச் 15

அச்செழு வடக்கு வல்லியப்பர் சிவன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சொற்பொழிவில் தலைமையுரையை பரிபாலன சபைச்செயளலர் கு. கபில்ராஜ் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் சிவநெறிச் செம்மல் ச. நவநீதன் "கும்பாபிஷேக மகிமை" என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவும் , சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும்.

---

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி நாளை விசேட உரையாற்றுவார்

கொழும்பு, 15

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த விசேட உரையானது அனைத்து தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளின் ஊடாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் கூறியுள்ளது. (அ)

---

## நேர்முக வர்ணனை

யாழ்ப்பாணம், மார்ச் 15

நீர்வேலி வடக்கு காளி அம்மன் தேவஸ்தான வருடாந்தத்தேர்த் திருவிழாவை முன்னிட்டு நேர்முக வர்ணனை நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில், நேர்முக வர்ணனையைச் சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் செ. த .குமரன் ஆற்றவுள்ளார். (ஐ)

---

## அமெரிக்க பேராசிரியர் யாழில் நாளை விரிவுரை!

யாழ்ப்பாணம், மார்ச் 15

அமெரிக்காவின் கோல்கேட் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் மற்றும் பெண்கள் தொடர்பான கற்கைகளின் இணை பேராசிரியரான நிமாந்தி ராஜசிங்கம் நாளை யாழ். பல்கலைக்கழகத்தில் விசேட விரிவுரை ஆற்றவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வை மொழியியல் ஆங்கிலத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

இதில், பேராசிரியர் நிமாந்தி ராஜசிங்கம் "Cartographies of Loss: Postwar Development and the Vital Art of T. Shanaathanan" ("இழப்பின் நிலவரைபடங்கள்: போருக்குப் பிந்தைய அபிவிருத்தியும் த. சனாதனனின் உயிரோட்டமான கலைப் படைப்புக்களும்") என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

அவரின் உரையின் சுருக்கமான தமிழாக்கம் நிகழ்விலே வழங்கப்படும். அத்துடன், உரையாளருடனான திறந்த கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். இந்த கோவிட் -19 சுகாதார விதிகளை பின்பற்றி அனைவரும் பங்கேற்க முடியும். (ஐ)

---

## பாதிக்கப்பட்ட விவசாயிகளை பதிவு செய்யுமாறு கோரிக்கை

இருபாலை, மார்ச் 15

இருபாலை தெற்கு பிரதேசத்தில், கடந்த வருட காலபோக நெல் பயிர்ச் செய்கையில் போதிய விளைச்சலின்றி பாதிக்கப்பட்ட கமக்காரர்களை பதிவு செய்யுமாறு கமக்காரர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

பதிவுகளை உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் மேற்கொள்ள வேண்டும் என்றும், பதிவு செய்ய வரும்போது ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டையும் கொண்டுவருமாறும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

## சுரங்க அகழ்வாராய்ச்சிக்கான அனுமதிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 15

பாரியளவில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதால் சுரங்க அகழ்வாராய்ச்சிக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்துக்கு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த அகழ்வாராய்ச்சிகளால் பாரியளவில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படும் அறிக்கைகளே இதற்குக் காரணம் என அவர் கூறினார்.

அகழ்வுப் பணிகளினால் அம்பலாந்தோட்டை - வலேவத்தை கிராமம் முற்றாக அழிவடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், விவசாயம் செய்யக்கூடிய வயல் நிலங்களும் பொருளாதார ரீதியில் பயன் தரக்கூடிய தென்னை போன்ற பயிரிடப்பட்ட நிலங்களும் அழிந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

இதன் காரணமாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் விசேட குழுவொன்றை நியமித்து, விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளவுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
15.03.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், பங்குனி 01

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கட்சி அரசியலும் தமிழ் தேசிய அரசியலும்?

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி (முன்னணி) - வவுனியாவில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களை திரட்டி, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றனர். முன்னர் யாழ்ப்பாணத்தில் செய்ததை - இப்போது வவுனியாவில் செய்திருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் நோக்கினால், அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்காக குரல் கொடுப்பது போன்று தெரியலாம் ஆனால், உண்மை அதுவல்ல. அது முற்றிலும் ஒரு கட்சியின் நடவடிக்கை. தமிழ்த் தேசிய கட்சிகள் என்போரின் நடவடிக்கைகளை உற்று நோக்கினால் ஒரு விடயத்தை தெளிவாகக் காணலாம். அதாவது, மக்கள் தங்களை மறந்துவிடக்கூடாது என்பதற்காகவே சில விடயங்களை செய்கின்றனர். அவைகள், தமிழ்த் தேசியத்தின் பெயரால் இடம்பெறுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் ஒன்றிணைந்து, இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்தே, குறித்த கட்சிகளை எதிர்ப்பதன் மூலம், மக்களை அணிதிரட்டும் முயற்சியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் ஈடுபட்டனர். ஒரு கட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கட்சியினர் - தாங்கள் இதுவரை கூறிவரும் விடயங்களை வெற்றிகொள்வதற்காக மக்களை அணிதிரட்டி, போராட்டங்களை நடத்தவில்லை. முக்கியமாக கொழும்பை முடக்கும் வகையில் போராட்டங்களை நடத்தவில்லை.

கொழும்பை முடக்காமல், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை திரும்பிப் பார்க்கப் போவதில்லை. ஏனெனில், வடக்கு - கிழக்கில் ஏற்கனவே பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு, போராட்டங்கள் நடந்திருக்கின்றன. வடக்கில் மக்களை அணிதிரட்டும் செயல்பாடுகளால், அரசாங்கத்தை இறங்கிவரச் செய்ய முடியுமென்றால் - அரசியல் தீர்வை எப்போதோ அடைந்திருக்கலாம்! - எனவே, வடக்கு - கிழக்கில் மக்களை அணிதிரட்டும் நோக்கிலும், மக்கள் மத்தியில் ஏதோவோர் அதிர்வலையை ஏற்படுத்த வேண்டுமென்னும் நோக்கிலும், மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் அனைத்துமே, தேர்தல் நலன்களை அடிப்படையாகக் கொண்ட செயல்பாடுகள் மட்டுமே! மக்கள் மத்தியில், தங்களது கட்சியின் ஆதரவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்தான். தமிழ் அரசு கட்சியின் ஏற்பாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்துக்கள் சேகரித்தமையும்கூட, இப்படியான ஒன்றுதான். வடக்கு - கிழக்கில் இடம்பெறும் ஆர்பாட்டங்கள், கடையடைப்புக்களையே ஒருபொருட்டாக கருதாத அரசாங்கம், சில ஆயிரக்கணக்காணவர்களின் கையெழுத்துக்களை கருத்தில் கொண்டு தனது நிலைப்பாடுகளை மாற்றுமா?

உண்மையில், தமிழ் அரசியல் கட்சிகள் கூறிவரும் விடயங்களை அடைவதற்கு, அவர்களிடம், எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. இந்த நிலையில் நாங்கள் இங்குதான் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சில செயல்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர். ஒருநாள் மக்களை அணிதிரட்டுவதன் மூலம் எதனை சாதிக்க முடியும்? பிரகடனங்களை செய்வதன் மூலம் எதனை செய்ய முடியும்? தமிழ் மக்கள் பேரவையின் தலைமையின் கீழ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், டி. பி. எல். எவ் (புளொட்) ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய மூன்று கட்சிகளின் ஆதரவுடன், மக்களை அணிதிரட்டி, பெரும் நிதிச் செலவில், “எழுக தமிழ்“ நிகழ்வுகள் இடம்பெற்றன. அனைத்தும், ஒருநாள் கிரிக்கெட் போன்று முடிவுற்றது. ஏற்றியிறக்கப்பட்ட மக்களும் கலைந்து போயினர்.

இவற்றின் அரசியல் விளைவு என்ன? ஆகக் குறைந்தது குறித்த மூன்று கட்சிகளைக்கூட ஓரணியில் தொடர்ந்து வைத்திருக்க முடியவில்லை. எழுக தமிழில் ஒன்றுபட்டவர்கள், பேரவையின், அரசியல் தீர்வாலோசனையில் ஒன்றுபட்ட மூன்று கட்சிகளும், பின்னர் அரசியல் தெருச் சண்டைகளில் ஈடுபட்டனர். கட்சிகளை ஒன்றுபடுத்தப் போவதாக கூறிய சிவில் சமூகம், இறுதியில் விக்னேஸ்வரன் தலைமையில் புதியதொரு கட்சிக்கு வழிகோலியது.

எனவே, மக்களை அணிதிரட்டுகின்றோம் என்னும் பெயரில் ஒருநாள் ஆட்டத்தில் ஈடுபடுவதால் எந்தவொரு பயனும் இல்லை. போராட்டம் என்றால், டில்லியில் விவசாயிகள் போராடியது போன்று, வாரங்கள், மாதங்கள் என்னும் அடிப்படையில் போராட வேண்டும். அரசியல் தலைவர்கள் என்போர் தங்களின் சொத்துக்களை தியாகம் செய்ய வேண்டும். ஆனால், இவ்வாறு நடக்கப் போவதில்லை. ஏனெனில், அதற்கான தியாக எண்ணத்தோடு எவரும் இல்லை. எனவே, கட்சிகளின் நலனை முன்னிறுத்தி நடைபெறும் விடயங்கள் எவையுமே தமிழ் தேசியத்திற்கான செயல்பாடுகள் அல்ல. அவைகள் வெறுமனே வாக்குச் சேகரிக்கும் செயல்பாடுகள் மட்டுமே! இதில் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். இப்போது, மக்களுக்குத் தேவை, அர்ப்பணிப்புமிக்க தொடர் அரசியல் செயல்பாடுகளாகும். இல்லாவிட்டால், இருப்பதை பாதுகாத்துக் கொண்டு, வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் தந்திரோபாய அரசியல் முன்னெடுப்புகளாகும்.

# ‘அரபு வசந்தம்’ போன்று விரைவில் ‘இலங்கை வசந்தம்’!

அலசுவது இராஜதந்திரி



*‘அரபு வசந்தம்’ என்ற வார்த்தை பிரயோகத்துடன் லிபியா, அல்ஜீரியா, துனிசியா, எகிப்து, யேமன், சிரியா, பஹ்ரெய்ன், ஈராக் ஆகிய நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டிருந்தது. வசந்தகாலம் என்பது இருளடைந்த சூழ்நிலைகளிலிருந்தும் விடுபட்டு ஓர் ஆரோக்கியமான காலநிலையைக் குறிப்பதாகவே இருக்கின்றது.*

*எனவே, ஊழல், மோசடி, சீரற்ற சட்டம் - ஒழுங்கு, அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் என்பவற்றால் துவண்டு போயிருந்த வட ஆபிரிக்க நாடுகள் பலவும் ‘அரபு வசந்தம்’ என்ற கோஷத்தோடு ஆரம்பமான மக்களின் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் என்பவை காரணமாக ஆட்சி மாற்றங்களுக்கு உள்ளாகின.*

*லிபிய அதிபராக இருந்த கேணல் மொஹமர் கடாபி, எகிப்து அதிபராக இருந்த ஹொஸ்னி முபராக் ஆகியோர் உட்பட துனிசிய, யேமன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் அவர்களின் பதவிகளிலிருந்தும் தூக்கி எறியப்பட்டிருந்தனர். லிபிய அதிபராக இருந்த மொஹமர் கடாபி கிளர்ச்சியாளர்களால் வீதிக்கு இழுத்துவரப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டார். எகிப்திய அதிபர் சிறைப்பிடிக்கப்பட்டார்.*

*ஈராக் அதிபராக இருந்த சதாம் ஹூசைன் பதவியிறக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ‘அரபு வசந்தம்’ ஏற்பட்டு ஆட்சி மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்பதாக வட ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தான்தோன்றித்தனமான ஆட்சி முறைக்கு முகங்கொடுத்திருந்தன. இருந்தபோதிலும் அரபு வசந்தம் மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதையே கோடிட்டுக்காட்டியிருந்தது.*

*இலங்கையிலும் ஏறத்தாழ ‘அரபு வசந்தத்தை’ போன்ற நிலவரமே விரைந்து தோற்றம் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கை மக்கள் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் துவண்டு போயுள்ளனர். எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு பெறுவதற்கும் ஏனைய அத்தியாவசிய பொருட்களைப் பெறுவதற்கும் நாட்டின் அனைத்துப் புறங்களிலும் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்துக்கிடப்பதை காணமுடிகின்றது.*

*இதுதவிர, அரசாங்கத்துக்கு உள்ளேயும் கருத்து வேறுபாடுகள் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே இன்றைய ஆட்சியாளர்களுக்கு பொதுமக்கள் வீதிகளில் இறங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று எச்சரித்துள்ளார்.*

*ஏற்கனவே, கடந்த ஒரு வருட காலத்தில் கொழும்பில் பல ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கு எதிராக நடந்தேறியிருந்தன. அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த மகளிர் அணியினர் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர்.*

*தற்போது எதிரணியிலுள்ள கட்சிகள் மேலும் அதிகளவில் நாடுதழுவிய வகையில் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் அரசுக்கெதிராக நடத்தும் விதத்தில் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றன.*

*நீர் வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அரசின்மீதான தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் விதத்தில் தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலம், உத்தியோகபூர்வ வாகனம் எனபவற்றை மீளவும் அரசிடம் கையளித்துள்ளார். நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் தலைதூக்கியிருக்கும்போது மக்களின் வரிப்பணத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், மற்றும் வாகனங்களை தாம் பாவிப்பதில் அர்த்தமில்லை என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.*

*அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஏற்கனவே கோடிக்கணக்கான பணம் அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் பலராலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலராலும் நீர் கட்டணமாக செலுத்தப்படாது நிலுவையிலிருப்பதாக தெரிவித்துள்ளார்.*


*அத்துடன், ஆட்சியிலிருப்போரின் புறம்போக்கான போக்கையும் அவர் சாடியுள்ளார். அண்மையில் அமைச்சரவை பொறுப்புகளிலிருந்து அகற்றப்பட்ட விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருக்கு ஆதரவாகவும் அமைச்சர் வாசுதேவ நாணக்கார குரல்கொடுப்பவராக இருக்கின்றார்.*

*அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவைப் போலவே மேலும் பல ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஆட்சியாளர்கள்மீது அதிருப்தி கொண்டுள்ள நிலையில் இன்றைய ஆட்சி விரைந்து மண்கவ்வப்போகும் நிலையை நெருங்குகின்றது என்றே குறிப்பிட முடியும்.*

*அமெரிக்க குடியுரிமை கொண்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் சகோதரரான நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரை மீளவும் அமெரிக்காவில் சென்று குடியேறுமாறு கோரும் இணையத்தளம் வாயிலான பிரசாரங்களும் வேகமடைந்து வருகின்றன.*

*இந்நிலையில், தற்போது ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும் இலங்கை இதுவரை பெற்றுள்ள வெளிநாட்டுக் கடன்களை மீளவும் செலுத்தி நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்திலிருந்தும் மீளவும் சீரான நிலைக்கு கொண்டுவருவது ஓர் இமாலய முயற்சியாக இருக்குமென்றே பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 15 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 01

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 3.00 - 4.30 |
| திதி | : | திரயோதசி |




**மேடம்**
நண்பர்களால் உதவி கிடைக்கும். குழந்தைகளின் உடல்நலம் பற்றிய பயம் வேண்டாம். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். நல்லவர்கள் அவசரத்திற்கு உதவுவர்.

**இடபம்**
அனுபவசாலிகளின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். எதிர்காலம் கருதி திட்டமிட்டு உழைப்பீர்கள். சேமிக்க வாய்ப்புண்டு. ஆடம்பர சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்**
அதிகாரியுடன் இணக்கமான சூழல் உருவாகும். வெகுளியாய் இருந்த உங்களுக்கு முன்னேறும் சாமர்த்தியம் அதிகரிக்கும். இன்றைய செயல்பாடு எதிர்கால வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

**கடகம்**
உங்கள் திறமையை மற்றவர்கள் முன்னிலையில் நிரூபிப்பீர்கள். குடும்பத்தில் தள்ளிப்போன முடிவுகளை இன்று எடுத்து நன்மை அடைவீர்கள். புதிய நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

**சிம்மம்**
முக்கிய விஷயத்தில் எதிர்பாராதவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்கள் உறுதுணையாக செயல்படுவர். பிறரிடம் கைமாற்றாக வாங்கிய பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**கன்னி**
நட்பு விஷயத்தில் கவனமாக இருப்பீர்கள். உற்சாகம் கூடும். பிள்ளைகளின் விஷயத்தில் சுபவிஷயம் பற்றிய பேச்சு தொடங்கும். மன உளைச்சலில் இருந்து விடுபடுவீர்கள். சந்தோஷம் அதிகரிக்கும்

**துலாம்**
பணியிடத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். திறம்பட செயல்படுவீர்கள். பணியாளர்களுக்கு மேலிட ஆதரவு கிடைக்கும். சுபசெய்தி வந்து சேரும். தொழிலில் லாபம் கூடும்.

**விருட்சிகம்**
அசையா சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தினரை மகிழ்விப்பீர்கள் நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். பணியில் இடமாற்றம் கிடைக்கும் . பிரச்னை நீங்கி நிம்மதி பிறக்கும்.

**தனுசு**
புதிய நட்பால் பிரச்னை ஏற்படாமல் இருக்க கவனமாக இருங்கள்.குடும்பம், பணியிடத்தில் அதிரடி மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டாம். சுபவிஷயம் பேசுவீர்கள்.

**மகரம்**
நீங்கள் பல வேலைகளை இழுத்து போட்டு பார்க்க வேண்டியிருக்கும். மேலதிகாரி உங்கள் திறமையைக் கண்டறிந்து பரிசளித்து மகிழ்வர் நண்பர்களிடையே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

**கும்பம்**
குழந்தைகள் வகையில் செலவு அதிகரிக்கும். அலைச்சலால் அசதி உண்டாகலாம்.பதற்றமோ அவசரமோ வேண்டாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது.

**மீனம்**
குடும்பத்தில் நிதானமாக போராடி வெல்வீர்கள். முயற்சிக்கு தக்க பலன் கிடைக்கும். முயற்சியில் தாமதம் ஏற்படும். நண்பர்களால் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. சுபச்செலவு மகிழ்ச்சி தரும். யாருடைய வாக்குறுதியை நம்பியும் ஏமாற வேண்டாம்.

# ஜெயலலிதாவுக்கு எதிரான செல்வ வரி வழக்கில் தீபா, தீபக் பெயர்கள் சேர்ப்பு

## சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

*சென்னை, மார்ச் 15,*

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதி ரான வழக்கில் அவருடைய உறவினர்களான தீபா மற்றும் தீபக் ஆகியோரை சேர்த்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மீதான செல்வ வரி வழக்கில் அவருடைய உறவினர்களான தீபா மற்றும் தீபக் ஆகியோரை சேர்த்து உயர் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக, 2008-09 ஆண்டுக்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாத வழக்கில், வருமான வரித்துறை உயர் நிதிமன்றம் மேல்முறையீடு செய்திருந்தது.

செல்வ வரி வழக்கில் ஜெயலலிதாவை விடுவித்ததை எதிர்த்து வருமான வரித்துறை தொடர்ந்த வழக்கு நேற்று சென்னை உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.இந்த வழக்கை



விசாரித்த நீதிபதிகள், ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா மற்றும் அண்ணன் மகன் தீபக் ஆகியோரை சேர்த்தது.

மேலும், இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை தீபா மற்றும் தீபக் ஆகிய இருவருக்கும் வழங்க வருமான வரித்துறைக்கு நீதிபதிகள் ஆணையிட்டனர்.

# கொரோனாவை முழுமையாக கட்டுப்படுத்திய மாநிலம் தமிழகம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

*சென்னை, மார்ச் 15,*

“கொரோனா தொற்றை முழுமையாக கட்டுப்படுத்திய மாநிலம் தமிழகம் எதிர் கட்சியோ, ஆளுங்கட்சியோ மக்களுக்காக பணி ஆற்றி வருகிறோம்“ என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. நகர நிர்வாகி இல்ல விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், “தி.மு.க. மீது மக்கள் வைத்த நம்பிக்கையே சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல் வெற்றிக்கு காரணம். நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவு- மக்கள் திமுக மீது வைத்த நம்பிக்கையை காட்டுகிறது. எதிர்கட்சியோ, ஆளுங்கட்சியோ மக்களுக்காக பணி ஆற்றி வருகிறோம். எதிர்க்கட்சியாக இருந்தபோதே மக்களுக்காக செயல்பட்ட இயக்கம் தி.மு.க. கொரோனா தொற்றை முழுமையாக கட்டுப்படுத்திய மாநிலம் தமிழகம்” என்று முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக தமிழகத்தில் கொரோனா தொற்றால் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி 124 பேர் பாதிக்கப்பட்டு இருந்தனர்.

இதையடுத்து 2 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று முன்தினம் கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100இற்கு கீழ் குறைந்துள்ளது. அந்த வகையில் தமிழகத்தில் நேற்றுமுன்தினம் 95 பேர் புதிதாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பங்களாரு அடிகளாரை சந்தித்த அமைச்சர் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள புகைப்படம்!

*சென்னை, மார்ச் 15,*

தமிழக தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மேல்மருவத்தூர் பங்களாரு அடிகளாரை சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படம் தமிழக அரசியலிலும் திமுக ஆதரவாளர்கள் மத்தியிலேயே விமர்சிக்கப்பட்டு சர்ச்சையை எழுப்பியுள்ளது. கலைஞர் கட்டிக்காத்த சுயமரியாதை முக்கியம் என்று கே.என்.நேருவுக்கு தி.மு.க.வினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

கடவுள் மறுப்பை வலியுறுத்திய பெரியாரின் திராவிடர் கழகத்தின் இயக்கத்தின் நீட்சியான திமுகவில், முக்கியத் தலைவர்கள் அமைச்சர்கள் பலரும் தற்போது கோயில்களுக்கு செல்வது என்பது வழக்கமான ஒன்றாக மாறியுள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலின் தொடர்ந்து கோயில்களுக்கு சென்று வழிபட்டு வருகிறார். இந்த நிகழ்வுகள் எல்லாம் திராவிட இயக்க கடும்போக்கு வாதிகளாலும் விமர்சிக்கப் பட்டு வருகிறது. அதே நேரத்தில், திமுக தலைவர்கள் கோயி லுக்கு சென்று



வழிபட்டுவிட்டு போலி நாத்திகம் பேசுகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

இந்த நிலையில்தான், தி.மு.க. வின் தலைமை நிலை யச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரை சந்தித் துள்ளார். இந்த சந்திப்பின் போது எடுக்கப்பட்ட புகைப் படம் தான் தற்போது சமூக ஊடகங்களில் திமுகவினர் மத்தியிலேயே விமர்சனத்தைப் பெற்று சர்ச்சையாகி உள்ளது.

# எதிர்கட்சிகள் ஒற்றுமையின்மையே பா.ஜ.கவின் வெற்றிக்கு காரணம்!

## காங்கிரஸ் தமிழக தலைவர் கே.எஸ் அழகிரி

*சென்னை, மார்ச் 15,*

எதிர்கட்சிகளின் ஒற்றுமையின்மையே பாஜகவின் வெற்றிக்கு காரணம் காங்கிரஸின் தமிழக தலைவர் கே.எஸ் அழகிரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த மாநிலங்கள் தேர்தலில் பா.ஜ.க 4இல் வென்றது. காங்கிரஸ் படுதோல்வியடைந்தது. இந்நிலையில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், தமிழக காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில்,

“எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை காரணமாகத்தான் ஏற்கனவே 4 மாநிலங்களில் ஆட்சியில் இருந்த பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடித்து வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், அது கடந்த வெற்றியை விடக் குறைவே, ராகுல் காந்தியின் தலைமையில் தான் பாஜகவின் பிரதமர் மோடியை வீழ்த்த முடியும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பு ஏற்பதன் மூலமே ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளின் தேசிய அளவிலான நோக்கங்கள் நிறைவேறும் - என்றுள்ளது.

## நிறைவுள்ளவர்களாக இருப்போம்



எப்படி வாழவேண்டும். எப்படி வாழக்கூடாது என்று இன்றைய நற்செய்தி மூலம் நமக்கு அறிவுறுத்துகின்றார் மத்தேயு.

காசு கொடுத்துப்பட்டங்கள் பதவிகள் தேடல், காட்டிக்கொள்ளுதல், தங்களை பிறர் தம்முடைய தலைவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏங்குதல் முதலியன இன்று நம்மிடையே மிகவும் காணப்படும் ஒரு நோயகும்.

மனிதரை மனிதராக மதிக்க வேண்டும். ஏனெனில் அனைத்து மக்களும் இறைவனுடைய சாயல்கள். (தொ: நூ 1:2) எனவே எம் மத் தியில் பிரிவினைகள் இருக்கக் கூடாது. ஏழைகள் பணக்காரர் என்ற பாகுபாடுகள் இருக்கக் கூடாது. நீங்கள் அனைவரும் சகோதரர்கள் (மத் 23:08) கடவுள் ஒருவரே நம் தந்தை, நாம் அவருடைய அன்புப் பிள்ளைகள், இறைவன் முன்னிலையில் நாம் அனைவரும் சமமானவர்கள். எனவே பிறரை மதிக்கின்றவர்களாகவும் அன்பு செய்கின்றவர்களாகவும், பிறரில் அக்கறையுள்ளவர்களாகவும் வாழ இத்தவக்காலத்தில் இறைவன் எங்களை அழைக்கின்றார். "உங்கள் தந்தை நிறைவுள்ளவராக இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள்" என்கிறார் இயேசு.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.

# பிரச்னைகளுக்குத் தீர்வு காண அரசுக்கு ஒரு மாத காலக்கெடு

## ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 15

**"நாட்டில் தற்போது நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடு வழங்கப்படும். அவ்வாறு இல்லையேல் எமது போராட்டம் தீவிரமடையும். ஜனநாயக வழியில் அரசை விரட்டியடிப்போம்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

அரசுக்கு எதிராக மார்ச் 15 ஆம் திகதி கொழும்பில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும். அரசுக்கு ஒரு மாதம் காலக்கெடுவை வழங்குவதற்கான அறிவித்தலை விடுக்கவே நாம் கொழும்பு வருகின்றோம்.

அந்தக் காலப்பகுதிக்குள் தீர்வு இல்லையேல் எமது போராட்டம் வலுக்கும்.

கொழும்பு வருவதற்கு பஸ் இல்லாவிட்டால் மக்கள் நடந்தாவது வருவார்கள். எனவே, எமது போராட்டத்தைத் தடுக்க முற்படவேண்டாம். நிச்சயம் எமது பலத்தைக் காட்டுவோம்- என்றார். (அ)

# தங்கத்தின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 15

உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1980.21 அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் 1988.18 அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை நேற்று 0.52வீதத்தினால் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உத்தியோகபூர்வ இல்லம், வாகனம் ஆகியவற்றை கையளித்த வாசுதேவ



கொழும்பு, மார்ச் 15

நீர் வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தமது உத்தியோகபூர்வ இல்லத்தையும் வாகனத்தையும் அமைச்சின் செயலாளரிடம் கையளித்துள்ளார்.

அவரது அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைச் செயற்பாடுகளில் பங்கேற்கப் போவதில்லை என்றும் அமைச்சுப் பொறுப்புகளை தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப் போவதில்லை என்றும் அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமக்கு வழங்கப்பட்ட வாகனம் மற்றும் இல்லத்தை மீள கையளிப்பதே சரியானதாக தமக்குபடுவதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள் ளார்.

தாம் தமது சகோதரரின் சிறிய ரக வாகனம் ஒன்றை பயன்படுத்தவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

# பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவை!

## 198 புள்ளி பெற்ற கொக்குவில் இந்து மாணவன்

யாழ்ப்பாணம், மார்ச் 15

எதிர் காலத்தில் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவேன் என 2021 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தை பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்சன் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடிப்படையில் அகில இலங்கை ரீதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன்



கஜலக்சன் முதலிடத்தை பெற்றுள்ள நிலையில் தனது சாதனை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் சூம் வகுப்பினூடாகவே எனது படிப்பை மேற் கொண்டேன். எனது அம்மா ஆசிரியர். அப்பா வியாபாரம் செய்கிறார். எனது அம்மா மற்றும் அப்பா ஊக்கமளித்ததன் காரணமாகவும் எனது பாடசாலையின் வகுப்பாசிரியர் மற்றும் எனது ஆசிரியர்களின் ஊக்கத்தின் காரணமாகவே இந்த பெரு வெற்றியை பெற முடிந்தது. அத்தோடு எதிர் காலத்தில் நான் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்ற விரும்புகின்றேன்-என்றார்.(அ-03)

# இலங்கை பயணிப்போருக்கு இங்கிலாந்து அரசு எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமை குறித்து தனது நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இங்கிலாந்து எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலை குறித்து எச்சரிக்கை விடுக்கும் வகையில் இலங்கைக்கான பயண ஆலோசனையில் இங்கிலாந்து திருத்தம் செய்துள்ளது.

இறக்குமதிக்கு தேவையான போதிய வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு காரணமாக மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் பற்றாக்குறையுடன் இலங்கையில் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகிறது.

கடைகள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் மருந்தகங்களில் நீண்ட வரிசைகள் இருக்கலாம். மின்சார விநியோகம் தடைபடலாம் எனவும் இலங் கைக்கான பயண ஆலோசனையில் இங்கிலாந்து மேலும் கூறியுள்ளது. (அ)

# பாடசாலையில் கற்கும் விடயங்களை வீட்டில் மீட்டு படித்தன் மூலமே சிறந்த சித்தி பெற்றேன்

## யாழ். பொஸ்கோ மாணவப் அக்சஜன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பாடசாலையில் கற்கும் விடயங்களை வீட்டில் சென்று மீட்டு படித்தன் மூலமே சிறந்த சித்தி அடைய முடிந்ததென யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியான 193 புள்ளிகளைப் பெற்ற மாணவன் சுதர்சன் அக்சஜன் தெரிவித்தார் .

நேற்றுமுன்தினம் வெளியிடப் பட்டபுலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 193 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தியை பெற்ற சுதர்சன் அக்சஜன் மேலும் கூறுகையில்-



நான் பாடசாலையில் கற்கும் விடயங்களை வீட்டில் சென்று மீட்டு படிப்பேன். அவ்வாறு படிப்பதன் மூலமே நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்று கொண்டேன். நான் எதிர்காலத்தில் ஒரு விமான பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது இலட்சிய மாகவுள்ளது. சிறப்பு தேர்ச்சி பெறுவதற்கு எனது பெற்றோர் மற்றும் எனக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு கொடுத்த ஊக்கமே காரணம்-என்றார். (அ-03)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிழக்கு மாகாண செயற்குழு கூட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிழக்கு மாகாணத்திற்கான செயற்குழு உறுப்பினர்களின் கலந்துரையாடலொன்று நேற்று கல்லடியில் இடம் பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் க.ஜெயப்பிரகாஸ் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் கணபதிப்பிள்ளை யோகராஜா, பொருளாளர் வ.சந்திரன், மட்டக்களப்பு மாவட்ட இணைப் பாளர் மாநகரசபை உறுப்பினர் வ.குபேரன் உட்பட கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள், தமிழர் விடுதலைக் கூட்டணி புனரமைப்பு, கிழக்கு மாகாணத் துக்கான நிர்வாக அலகுகளைப் புனரமைத்தல், மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் போன்றன தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.செயலகம் முன்பாக ஈ.பி.டி.பி. ஆர்ப்பாட்டம்!

## பிரதேச அபிவிருத்தியில் இடையூறு ஏற்படுத்தப்படுவதைக் கண்டித்து

**யாழ்ப்பாணம், மார்ச் 15**

**பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளின்போது யாழ்.மாவட்ட செயலகத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளை கண்டித்து யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக கண்டன போராட்டமொன்று இடம்பெற்றது.**

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய அக்கட்சியின் உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் வாயில் கதவை அடைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வந்த யாழ்.மாவட்ட செயலாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரொன்றை கையளித்ததுடன் 10 நாட்களுக்குள் பிரச்னைக்குரிய தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இல்லை எனில் முழுமையாக மாவட்ட செயலகத்தை முடக்குவோம் எனவும் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்ட அபிவிருத்திகளை பிரதேச ரீதியாக முன்னெடுக்கும்போது ஏற்கனவே அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை கணக்கில் கொள்ளாது. தன்னிச்சையான செயற்பாடுகளில் மாவட்ட செயலகம் ஈடுபட்டு வருதால் மக்களின் அவசிய தேவைகள் புறக்கணிக்கப்படுவதை மக்கள் பிரதிநிதிகளான எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

குறிப்பாக பிரதேச சபையை மையப்படுத்திய அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் முழுயாக புறக்கணிக்கப்




படும் நிலை யாழ் மாவட்டத்தில் மட்டும் காணப்படுகின்றது. அத்துடன் மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாகவே இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால் யாழ்.மாவட்டத்தில் மாவட்ட செயலகம் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாக காணப்படுகின்றது.

மாவட்ட செயலகத்தின் இவ்வாறான நிலைமை மக்களின் தேவைகருதிய செயற் பாடுகளுக்கு இடையூறாக இருப்பதை பிரதேச மக்கள், மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மிடம் நாளாந்தம் முறையிட்டநிலையில் போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்-என்றனர். (அ)

---

### இரணைதீவு கடற்பரப்பில் கைதான

# இந்திய மீனவர்கள் 8 பேருக்கும் ஒத்திவைத்த சிறைத்தண்டனை

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 27ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட 08 இந்திய மீனவர்களுக்கும் ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்கிப் பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 27ஆம் திகதி எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 08 இந்திய மீனவர்களை அவர்களின் படகுடன் கைது செய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர்கள் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றபதில் நீதவான் எஸ். பாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடந்த 11 ஆம் திகதி வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அன்றையதினம் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நேற்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டு அன்றைய தினம் குறித்த மீனவர்களுக்கு எதிராக குற்றச் சாட்டுப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறும் மன்று கட்டளையிட்டது.

அதற்கமைவாக நேற்று 08 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் குற்றச்சாட்டு பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட இந்திய மீனவர்கள் 08 பேருக்கும் தலா ஏழு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதேவேளை, இவர்களை கைது செய்யும்போது இவர்களிடமிருந்த கைத்தொலைபேசிகள் மற்றும் நாணயங்கள் விடுவிக்கப்பட்டதுடன் படகு, வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் இந்திய மீனவர்கள் சார்பாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

### புலமைப்பரிசில் பெறுபேறுகள்

# வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முன்னிலை!

வவுனியா, மார்ச் 15

வெளிவந்த புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முன்னிலை வகிக்கின்றது.

178 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் 98 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கும் அதிகமான புள்ளிகளை பெற்றுள்ளனர்.

இப்பெறுபேறானது 55.6 வீதமாக உள்ளதுடன் அரவிந்தன் அபிரான் 192 புள்ளிகளையும் தயாகரன் கிருத்திகன் 191 புள்ளிகளையும் ஜெயக்குமார் காயத்திரி 184 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். (அ)

---

# பாடசாலை பஸ் சேவை கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 15

எரிபொருள் விலையேற்றத்தின் அடிப்படையில், பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணத்தை, அதிகரிக்கவுள்ளதாக மாவட்ட பாடசாலை போக்குவரத்துச் சேவையின் தலைவர் ஹரிஸ்சந்திர பிரேமசிறி தெரிவித்தார்.

இதற்கமைய, பிரதான நகரங்களில் 80 கிலோமீற்றர் தூரத்திற்கான சேவைக்கு, மாதாந் தம் தற்போது அறவிடப்படும் தொகைக்கு மேலதிகமாக 1,000 ரூபா அறவிடப்படும். கிராமப் புறங்களில் 10 கிலோமீற்றர் தூரத்திற்கு 200 முதல் 300 ரூபா வரையில் அதிகரிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

---

# மலையக மக்கள் முன்னணியும் தேசிய அரசமைக்க கடும் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 15

தற்போது குடும்ப ஆட்சி நடந்துக்கொண்டிருக்கும் இலங்கையில் தேசிய அரசு என்பது சாத்தியப்படாத விடயம். குடும்ப ஆதிக்கமே ஆட்சியில் கோலோச்சியுள்ளது. அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதி அதிகரித்துவருவதால் நாளாந்தம் பொருட்களின் விலை உயர்வடைகின்றது. இதனால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருகின்றனர். எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு, போக்குவரத்துறைகூட ஸ்தம்பித்துள்ள நிலை. அதுமட்டுமல்ல சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய பேர வலம்வேறு,

எனினும், நாட்டை மீட்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசு, நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கவில்லை. அது தொடர்பில் ஆட்சியாளர்கள் அலட்டிக்கொள்ள மாட்டார்கள். எனவே, இந்த அரசை விரட்டியடித்தால்தான் நாட்டு மக்களுக்கு விமோசனம் கிட்டும்.

தேசிய அரசமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கூறவில்லை .மாறாக தேசிய வேலைத்திட்டம் பற்றியே அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த நாட்டில் குடும்ப ஆட்சியே நிலவுகின்றது. அங்கு பிறரின் கருத்துக்கு இடமில்லை. அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர். குடும்ப ஆட்சி நடக்கும் சூழ்நிலையில் தேசிய அரசு சாத்தியப்படாது. குடும்பத்தின் திட்டங்களே அமுல்படுத்தப்படும். போர் நடைபெறும் உக்ரைனில் வாழும் மக்களை விட, இலங்கைவாழ் மக்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தோட்டத்தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமைமா கிடைக்குமா என்பது சந்தேகமே. " - என்றார். (அ)

---

# போதைப்பொருளுடன் 39 பேர் விருந்தகம் ஒன்றில் சிக்கினார்கள்!

கொழும்பு, மார்ச் 15

வென்னப்புவவில் உள்ள விருந்தகம் ஒன்றில் போதைப் பொருளுடன் 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரகசிய தகவலுக்கு அமைய, நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர்கள் 20 முதல் 30 வயதுடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

---

# கிளிநொச்சியில் 75 பேருக்கே நேற்று எரிவாயு விநியோகம்!

கிளிநொச்சி, மார்ச் 15

நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான பொருட்கள் தட்டுப்பாடு நிலைமையை அடுத்து நேற்று கிளிநொச்சி மாவட்ட லிற்றோ சமையல் எரிவாயு விநியோக நிலையம் முன்னால் அதிகாலை முதல் மக்கள் காத்திருந்தனர்.

இந்த நிலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுமார் 75 பேருக்கு மாத்திரமே சமையல் எரிவாயு வழங்கப்பட்டது.

நேற்றைய தினமும் பலர் சமையல் எரிவாயு பெறச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர். (அ)

# கொத்மலை ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பதவியை துறந்தார் நிமல் பியதிஸ்ஸ எம்.பி!

கொழும்பு, மார்ச் 15

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதிச் செயலாளரான நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, கொத்மலை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார்.

69 மில்லியன் மக்களின் ஆணையை அவமதிக்கும் வகையில் அரசாங்கம் வழங்கிய பதவியை வகிப்பது தனது மனசாட்சிக்கு ஏற்புடையதல்ல என நுவரெலியா மாவட்ட கொத்மலை பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பதவியை இராஜினாமா செய்யும் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜினாமா கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# நாடளாவிய ரீதியில் சுகாதாரத்துறை ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 15

நாடளாவிய ரீதியில் சுகாதார துறை ஊழியர்கள் இன்று ஒரு மணி நேர பணி பகிஷ்கரிப்பை முன்னெடுத்ததுடன் கவன ஈர்ப்பு போராட்டத்தினையும் முன்னெடுத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டங்களை அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம்,சுகாதார தொழில் வல்லுனர்கள் சம்மேளனம் உட்பட பல சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தபோராட்டத்தை முன்னெடுத்தன.

நேற்று நண்பகல் 12.00மணி தொடக்கம் 1.00மணி வரையில் பணி பகிஷ்கரிப்பை மேற்கொண்டு கவன ஈர்ப்புப் போராட்டங்களும் நடத்தப்பட்டன. (அ)

# பாடசாலை மாணவன் சடலமாக மீட்கப்பட்டார்

கொழும்பு, மார்ச் 15

பொகவந்தலாவை, செல்வகத்தை தோட்டப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பாடசாலை மாணவன் ஒருவனின் சடலம் நேற்று முன் தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

உயர்தர வகுப்பில் கல்வி பயிலும், பாரதிதர்ஷன் (வயது - 18) என்ற மாணவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை சென். மேரீஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்று போட்டியைக் கண்டுகளித்துவிட்டு வீடு திரும்பிய நிலையில், குறித்த மாணவன் காணாமல் போயுள்ளார்.

மாணவனை நீண்ட நேரம் காணவில்லை என உறவினர்கள் தேடிய நிலையில், குறித்த மாணவனின் சடலம் கிணறொன்றில் இருப்பதை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## விசேட சுற்றுலா பொலிஸ் நிலையங்களை அதிகரிக்க ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 15

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்ட விசேட சுற்றுலா பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை 27 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து சட்டவிரோதமாக பணம் பெறுவது மற்றும் பல்வேறு மோசடிகள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் 15 சிறப்பு சுற்றுலா பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. (அ)

# தேசிய அரசு பயனற்றது!

## அமைச்சர் மஹிந்த அமரவீர கருத்து



**கொழும்பு, மார்ச் 15 தேசிய அரசாங்கம் பயனற்றது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

ஹம்பாந்தோட்டையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டில் டொலர்கள் இல்லை. வெளி நாட்டு கையிருப்பு இல்லை. நாம் உண்மையில் மரணத்தின் விளிம்பில் இருக்கிறோம். இப்போது எங்களிடம் அதிக எண்ணிக்கையிலான புற்றுநோயாளிகள் உள்ளனர், இது அதிகரித்து வருகிறது.

இதனை குறைக்க வேண்டிய அவசியம் உள்ளது. இந்த நேரத்தில் அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (அ)

# செல்பி எடுத்த ஜோடிக்கு ரூ. 15 ஆயிரம் அபராதம்!

கொழும்பு, மார்ச் 15

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் உள்ள 37-38 ஆவது கிலோ மீற்றர் கல்லுக்கு இடையில் செல்பி எடுத்துக்கொண்டு பொறுப்பற்ற முறையில் பயணித்த தம்பதியருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

15,100 ரூபாவை அபராதமாக விதித்து மத்துகம பிரதான நீதவான் தம்மிக்க உடுவவிதான உத்தரவிட்டார்.

மாத்தறை மற்றும் அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய தம்பதியினரே தண்டனைக்குள்ளாகினர். இச்சம்பவம் பெப்ரவரி 26 அன்று நடந்தது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தொடங்கொட நுழைவாயிலுக்கு அருகில் சென்றுகொண்டிருந்தபோது குறித்த பெண் வாகனத்தின் திறந்த மேற்பகுதியினூடாக செல்பி எடுத்துள்ளார்.

தம்பதியினரின் நடவடிக்கைகள் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பிரிவின் பாதுகாப்பு கமெராவில் பதிவாகியிருந்ததைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலை பொலிஸ் பிரிவினர் சம்பவத்துடன் தொடர்புடைய காரை கண்டுபிடித்து, தம்பதியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். (அ)

# நான்கு எரிபொருள் கப்பல்கள் ரத்து மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு?

கொழும்பு, மார்ச் 15

இந்த வார இறுதிக்குள் டீசல் தட்டுப்பாடு முடிவுக்கு வரும் என அதிகாரிகள் கூறினாலும், இந்த வார இறுதி வரை தொடரும் என பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முத்துராஜவெல முனையத்தில் சுமார் 20,000 தொன் டீசல் சரக்கு இறக்கப்பட்ட போதிலும், அடுத்த மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு அது போதுமானதாக இருக்கும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இம்மாதம் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் வரவிருந்த நான்கு பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சபுகஸ் கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமானது சுமார் 7,000 தொன் டீசல் உற் பத்தித் திறன் கொண்டுள்ளதாகவும், கச்சா எண்ணெய் குறைவினால் இன்னும் சில நாட்களில் சுத்திகரிப்பு நிலையத்தை மூட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

# இலங்கையில் ஐ.நா. உணவு உச்சி மாநாடு

கொழும்பு, மார்ச் 15

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37வது ஆசிய பசுபிக் மாநாட்டை இலங்கையில் நடத்த தீர்மானக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் டாக்காவில் நடைபெற்ற 36ஆவது பிராந்திய மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கலந்து கொண்டார்.

உலகெங்கிலும் உள்ள 130 நாடுகளில் இருந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் உணவுப் பாதுகாப்பை அடைவதற்கும், அனைவருக்கும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துவதற்கும் போதுமான உயர்தர உணவைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் பற்றி மாநாட்டில் ஆராய்ந்தனர்.

2024ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறும் உச்சி மாநாட்டில்40 நாடுகள்பங்கேற்க உள்ளன.

பங்களாதேஷ் விவசாய அமைச்சர் கலாநிதி மொஹமட் அப்துல் ரசாக் மற்றும் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே ஆகியோரும் இந்த விஜயத்தின் போது இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் பயிர் பரிமாற்றம் மற்றும் விவசாய தொழில்நுட்ப பரிமாற்றம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் நாயகம் கியூ டோங்கிவ் அவர்களுடன் இலங்கையின் விவசாய அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாடு சென்ற இலங்கையர்கள் நாட்டுக்கு பணம் அனுப்புவதில்லை

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்கள் இலங்கைக்குப் பணம் அனுப்புவதில்லை என ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்

எம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிலிருந்து வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுச்சென்றுள்ள கணிசமான தொகை இளைஞர் யுவதிகள் அங்கு சென்று பணம் உழைக்கின்றபோதிலும் அவர்கள் தமது வருமானத்தைத் தாய் நாட்டுக்கு அனுப்புவதில்லை. இதனால் அரசாங்கம் எதிர்பார்த்துள்ள டொலர் வருமானம் நாட்டுக்கு கிடைப்பதில்லை.

மேலும், பொருட்களின் விலையேற்றத்தை தனிப்பட்ட ரீதியில் நானும் விரும்பவில்லை. ஆனால் இந்நிலைமையை தவிர்க்க முடியாதுள்ளது. அதனால் கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பத்திலேயே இயன்றளவு பொருட்களின் விலைகளை குறைக்க முயற்சி செய்கிறோம்-என்றார். (அ)

# சாத்தியமான அரசியல் தீர்வை சாதிப்பதற்கு விவேகம், நிதானம், விடாமுயற்சி தேவை

அ. வரதராஜா பெருமாள்

“முயற்சி திரு வினையாக்கும்”, “காற்றுள்ள போதே தூற்றிக் கொள்” , “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” , “அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்” , “அவ தந்திரம் தனக்கு அந்தரம்” - இவையெல்லாம் தமிழில் பல நூற்றாண்டுகளாக உள்ள முது மொழிகள்.

இவற்றை எமது தமிழ் மக்கள் தங்கள் தலைவர்கள் என நம்புபவர்களுக்கு திரும்பத் திரும்ப சொல்ல வேண்டியுள்ளது. இப்போதாயினும் தமிழர்களின் அரசியல் சமூக பிரதிநிதிகளும் அவர்களை ஆதரித்துக் கொண்டும் வலுப்படுத்திக் கொண்டும் இருக்கின்ற சமூக பிரமுகர்களும் தமது மூளையில் பதித்து மனச்சாட்சிகளுக்கு உண்மையாக நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும். இவர்கள் இதுவரை காலமும் வானத்தில் ஏறி கோட்டை கட்டி தமிழ் மக்களை வாழ வைக்கப் போவதாக கற்பனைக் கதைகளை அவிட்டு விட்டுக் கொண்டிருந்தது போதும். இனியும் அதுவே தொடருமாக இருந்தால், இந்தப் பிரதிநிதிகளோ பிரமுகர்களோ தமது சொந்த நலன்களில் ஒன்றையும் இழந்து விடப் போவதில்லை, ஆனால், இலங்கை வாழ் தமிழ்ச் சமூகம் தான் தொடர்ந்தும் சிதைந்து சின்னாபின்னமாகி சீரழியப் போகிறது.

இந்தக் கட்சிகள் மத்தியில் உள்ள சில பிரமுகர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அவ்வப்போது மேற்கொள்ளுகின்ற தீர்மானங்களையும் உயர்த்திப் பிடிக்கின்ற சுலோகங்களையும் வெளியிடுகின்ற அறிக்கைகளையும் பார்க்கும் போது எப்படிப்பட்ட பரிதாபகரமான அரசியல் சமூக வளையங்களுக்குள் தமிழ் மக்கள் அகப்பட்டிருக்கிறார்கள் என்று வேதனைப்பட வேண்டியுள்ளது.

இழவில போற நினைப்பால பிழைப்புதான் கெடும்.

மேற்கூறப்பட்டவைகள் ஒரு புறமிருக்கட்டும்,

தமிழர்கள் மத்தியில் உள்ள பிரபலமான 6 தமிழ்க் கட்சிகளைக் கொண்ட இரண்டு அரசியல் கூட்டு அணிகள் இணைந்து சுமார் இரண்டு மாத இழுபறிகளுக்குப் பின்னர் இந்தியப் பிரதமருக்கென ஒரு கடிதத்தை வரைந்து அதில் இரா சம்பந்தன் உட்பட இக்கட்சிகளின் தலைவர்களின் கையொப்பங்களுடன் அதனை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரிடம் கையளித்தார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

அந்தக் கடிதத்தில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், (1) 13ஆவது திருத்தம் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும், (2) மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்பட வேண்டும், மற்றும் (3) அதற்கு இந்திய அரசாங்கம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைக் கொடுத்து அவற்றை நிறைவேற்றச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளே பிரதானமானவைகள்.

அந்தக் கோரிக்கைகளை மட்டும் முன்வைத்து முயற்சிகளை முன்னெடுத்திருந்தால் பிரதானமான முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களையும் மலையக தமிழ்த் தலைவர்களையும் ஒருங்கிணைத்தபடி பயணித்திருக்கலாம். ஆனால் தங்களது வாக்கு வங்கிகளில் எங்காவது ஓட்டை விழுந்து விடுமோ என்ற பயத்தில் தங்களது வீறாப்பு கோரிக்க்கைகளையெல்லாம் தீர்மானத்தில் இணைத்துக் கொண்டதால் முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்களுடனான ஐக்கியத்தை கோட்டை விட்டு விட்டார்கள். இவர்களது அரசியல் முன்னுரிமைகள் தமிழ் மக்களின் நலன்கள் குறித்தவை என்பதை விட தமது வாக்கு வங்கியில் உள்ளவற்றை காப்பாற்றுதல் மற்றும் எதிர்வரும் தேர்தலில் தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளுதல் என்பவற்றை மையமாகக் கொண்டவையே என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இந்த ஆறு கட்சிகளினதும் கூட்டுக் கோரிக்கைகள் தவறானவை எனவும், அவை எதிர்க்கப்பட வேண்டியவை என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலமைந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் காரசாரமாக கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறது. அதனை வலியுறுத்தும் விதமாக சில ஆயிரம் மக்களைத் திரட்டி ஓர் ஆர்ப்பாட்டக் கூடலையும் நடாத்தியது. அக்கட்சி தொடர்ந்தும் அவ்வாறான அரசியலில் விடாப்பிடியாக உள்ளது. அந்தக் கட்சியின் நிலைகள் மற்றும் அதன் பின்னணிகளைத் தெரிந்து கொள்கையில் அக்கட்சியின் செயற்பாடுகள் புரிந்து கொள்ளப்படக் கூடியவையே. காலத்தின் சூழலில் அவற்றைப் பெரிது படுத்த வேண்டிய அவசியமில்லை என்பது ஒரு புறமிருக்கட்டும். ஜனநாயகத்தில் பெரும்பான்மையான மக்களின் அபிப்பிராயங்களே அவர்களின் சமூக அபிலாசைகளைப் பிரதிபலிக்கிறது என முடிவு கொள்ளப்பட வேண்டும்.

குறிப்பிட்ட 6 கட்சிகளினதும் தலைவர்கள் இந்தியப் பிரதமருக்கென கடிதம் எழுதியதற்கான காரணம் - ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான தற்போதைய அரசாங்கம் ஒரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளில் உள்ளது. அதற்கான தயாரிப்புக்கென பெரும்பாலும் சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட நிபணர்களையே அவர் நியமித்திருக்கிறார்: ஜனாதிபதி கோட்டாபய மாகாண சபைகள் மற்றும் அவற்றுக்கான அதிகாரப் பகிர்வுகள் அவசியமற்றவை என்ற அபிப்பிராயத்தை பல சந்தரப்பங்களில் நேரடியாகவே வெளிப்படுத்தி வந்திருக்கிறார். எனவே புதிய அரசியல் யாப்பின் மூலம் மாகாண சபை முறையே ஒழிக்கப்படலாம் அல்லது 13வது திருத்தத்



தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கணிசமாக குறைக்கப்படலாம் என்றவாறான எண்ணப்பாடுகள் பரவலாக நிலவுவதை அடிப்படையாகக் கொண்டே மேற்குறிப்பிட்ட கடிதம் இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்டதென்பது வெளிப்படையான விடயமே.

இவ்வாறு கடிதம் எழுதியது சரியா பிழையா அல்லது அதிலுள்ள விடயங்கள் சரியா பிழையா என்பதல்ல பிரச்சினை. இக்கடிதத்தின் மூலமாக குறிப்பிட்ட தமிழ்க் கட்சிகள் தமது எவ்வகையான அரசியலை வெளிப்படுத்துகிறார்கள்? இந்தியாவிடமிருந்து அவர்கள் எதிர்பார்ப்பதென்ன? இந்தியாவைப்பற்றி அவர்களது புரிதல்கள் என்ன? தமிழர்களின் நலன்கள் தொடர்பில் இந்தியாவுக்கு கடமை உண்டு பொறுப்பு உண்டு என்று இந்தக் கட்சிகள் சொல்வதில் ஏதாவது யதார்த்தமான அர்த்தம் இருக்கிறதா? அப்படி நினைப்பது - சொல்வதன் மூலம் தமிழர்களினுடைய நலன்கள் தொடர்பில் இந்தக் கட்சிகளினுடைய கடமைகளும் பொறுப்புக்களும் முடிவடைந்து விடுகிறதா? ஏன்ற பல கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன? எப்படி எந்த அளவில் இருக்கும்? இந்தியா எவ்வாறாக என்ன அடிப்படைகளில் செயற்படும் என்ற கேள்விகளெல்லாம் ஒரு புறமிருக்கட்டும், 13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் - மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக தமிழ்க்கட்சிகள் வேறு என்ன செய்கிறார்கள்? 13ஆவது திருத்தம் தரும் அதிகாரப் பகிர்வுக்கும் மேலாக பெரும் இலட்சியங்களையெல்லாம் முன்வைக்கும் இந்தக் கட்சிகள் தமது இலக்குகளை நோக்கியதொரு முழுமையான அரசியல் சமூக செயற் திட்டங்களைக் கொண்டிருக்கின்றார்களா? அப்படியிருந்தால் அந்த வேலைத் திட்டங்கள் என்ன? அவை பற்றி எதுவும் இந்தக் கட்சிகளால் வெளியிடப்படுவதாக இல்லை.

இந்தக் கட்சிகளிடம் அடுத்து வரும் தேர்தலுக்கான இலக்குகளையும் தயாரிப்புகளையும் தவிர தமிழ் மக்களின் பொது அரசியல் சமூக அபிலாசைகள் தொடர்பாக எந்தவித திட்டமோ அக்கறையோ இவர்களிடம் இல்லையென்பதோடு அதற்கான அரப்பணிப்புக்கும் இவர்கள் தயாரானவர்கள் இல்லையென்பதை தமிழர்கள் மத்தியிலுள்ள பொது அரசியல் தொடர்பில் பகுத்தறிவு கொண்ட எல்லோரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனை பலரும் தயங்காமல் பத்திரிகைகள் வழியாகவும் காணொளிகள் ஊடாகவும் வெளிப்படுத்துகிறார்கள்.

இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் எழுதியது சரி. ஏன்னதான் இருந்தாலும் இலங்கையின் பாராளுமன்றத்தின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 13வது திருத்தம் மற்றும் அதனோடு மாகாண சபைகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட சட்டங்களால்தான் மாகாண சபை உருவாகியது - இன்னமும் மாகாண ஆட்சி ஆளுநர் அதிகாரத்தின் கீழ் என்றாலென்ன செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மாகாண சபையின் அதிகாரங்களைக் கூட்டுவதாயினும் சரி, மாகாண சபையை சுயாட்சி உடைய ஓர் அமைப்பாக மாற்ற வேண்டுமென்றாலும் அது புதிய சட்டங்கள் மூலமாகவும், 13வது திருத்தத்தை திருத்தும் இன்னுமொரு அரசியல் யாப்புத் திருத்தம் மூலமாகவோதான் நடைபெற வேண்டும். இலங்கை அரச அதிகாரத்தில் யார் இருந்தாலும் அவர்கள்தான் அவற்றை செய்ய வேண்டும்.

எனவே, இலங்கை அரசாங்கத்தை அவை தொடர்பாக செயற்பட வைப்பதற்கு இலங்கைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர்ச்சியான நடவடிக்கைகள் மிகப் பிரதானமானவைகளாகும். அவை குறித்து

இந்தத் தமிழ்க் கட்சிகளிடம் முதலாவதாக ஒரு கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலான வேலைத் திட்ட வரைபடமும் அவற்றை முன்னெடுப்பதற்கான தயாரிப்புகளும் அவசியமானவை:

அடுத்து அதனடிப்படையில் தமிழர்கள் மத்தியிலுள்ள அரசியல் சமூக சக்திகளை, தேர்தல் அரசியலுக்கு அப்பால், முடிந்த அளவுக்கு ஒன்று திரட்டுதல் வேண்டும்:

அடுத்து, இலங்கையிலுள்ள அனைத்து சிறுபான் மைத் தேசிய இனங்களினதும் அரசியற் கட்சிகளின் தலைவர்களை, சமூகப் பிரதிகளை குறிப்பிட்ட இலக்கை சாதிக்கும் நோக்குடன் ஒருங்கிணைக்க வேண்டும்:

அடுத்து, வடக்கு - கிழக்கு வாழ் அனைத்து பரந்து பட்ட மக்கள் மத்தியிலும் குறிப்பிட்ட குறிக்கோள்கள் குறித்து விழிப்புணர்வு மற்றும் விளக்க பிரச்சாரங்களை தொடர்ச்சியாக மேற் கொள்ளுதல் வேண்டும்:

அடுத்து சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகள் மற்றும் குறிப்பிட்ட இலக்குக்கு ஆதரவாக அணி திரளக் கூடிய கட்சிகள், குழுக்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகிய அனைத்தையும் குறிப்பிட்ட இலக்குக்கான நட்பு சக்திகளாக மாற்றி ஒருங்கிணைக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவான சந்திரிகா பண்டாரநாயக்கா, டியூ குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, விக்கிரமபாகு கருணாரத்ன, லால் விஜயவர்த்தன, ஜெயம்பதி விக்கிரமரத்ன போன்ற பல நூற்றுக்கணக்கானோர் தென்னிலங்கையில் உள்ளனர். அவர்களையெல்லாம் ஒரு சக்தியாக இணைத்து மாகாண சபைகளுக்கான “அதிகாரப் பகிர்வு இயக்கம்” ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதன் மூலம் பரந்து பட்ட சிங்கள மக்கள் மத்தியிலும் ஓர் அரசியற் தெளிவை ஏற்படுத்தும் பிரச்சாரத்தை காத்திரமான முறையில் தொடர்ச்சியாக மேற் கொள்ளுதல் வேண்டும்:

அடுத்து வரப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையாக தமிழ்க் கட்சிகள் சஜித் பிரேமதாசாவைத் தான் ஆதரிக்கப் போகிறார்கள். தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையான தமிழர்களும் முஸ்லிம் மக்களும் அவருக்கே வாக்களிப்பார்கள் என்பது அரசியல் அவதானிப்புடைய அனைவருக்கும் தெரிந்த விடயமே. சஜித்தும் தமிழ் மக்களுக்கு மேற்போக்காக வாக்குறுதிகளை அள்ளி வழங்குவார். அப்படிப்பட்டவரிடம் இந்தத் தமிழ்க் கட்சிகள் இப்போதே 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றவும் மாகாண சபைகள் சுயாதீனமாகவும் வலிமையாகவும் செயற்படுவதற்குமான வாக்குறுதிகளை பெற்று, அது தொடர்பாக அவரும் அவரது கட்சியினரும் சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

தமிழகம் மற்றும் புதுடில்லி மட்டங்களில் பரந்த அளவுக்கு இதற்காக தொடர்ச்சியான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறை கொண்ட மேலைத் தேச நாடுகள் 13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும், இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் சுயாதீனமான மாகாண ஆட்சி முறையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற அக்கறை கொண்டவர்களே. எனவே அந்த நாடுகளின் அரசுகள் மற்றும் அந்த நாடுகளில் ஜனாயகத்துக்காகவும் அனைத்து இனங்களுக்குமான நீதி, பாதுகாப்பு, அடிப்படை சுதந்திரங்கள், சமத்துவம் ஆகியவற்றிற்காக குரல் கொடுக்கின்ற நிறுவனங்களின் ஆதரவை திரட்டுதல் வேண்டும்.

இவ்வாறான வேலைத் திட்டங்கள் அனைத்தையும் அமைப்பு ரீதியாகவும், ஒருங்கிணைக்கப்பட்ட முறைகளிலும் விடாமுயற்சியாக மேற்கொண்டாலே உரிய பலனை அடைய முடியும். அதற்கான செல்வாக்கும் வளமும் பலமும் பின்னணிகளும் இந்தக் கட்சிகளுக்கு உண்டு. இதற்காகவே தமிழ் மக்கள் இவர்களை தங்கள் அரசியற் பிரதிநிதிகளாக மீண்டும் மீண்டும் ஆக்குகிறார்கள். இவற்றையெல்லாம் விட்டுவிட்டு “கடிதம் எழுதி விட்டோம்”, இந்தியாவுக்கு அதன் கடமையையும் பொறுப்பையும் உணர்த்திவிட்டோம்”, இனி இந்தியப் பிரதமர் மற்றும் தமிழக தமிழக முதலமைச்சரை சந்திப்பது மட்டும்தான் பாக்கியாக உள்ளது”, மேலும், ”பாராளுமன்றத்தில் அடிக்கடி முழங்குவோம்”, பத்திரிகைகளுக்கு அவ்வப்போது அறிக்கை விடுவோம்”, அடுத்த தேர்தலை நோக்கி வேண்டிய வேலைகளை அதிதீவிரமாக மேற் கொள்வோம்” என இந்தக் கட்சிகள் இருக்குமாக இருந்தால் தமிழர்கள் தொடர்ந்தும் இலவு காத்த கிளிகளாகவே ஆவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

# ஓ.பி.எஸ், இ.பி.எஸ்ஸுக்கு எதிராக தனி அணி ஏன்?

ஆ. விஜயானந்த்

அ.தி.மு.க தலைமைக்கு எதிராக தனி அணி ஒன்றைக் கட்டமைக்கும் முயற்சியில் அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட அன்வர்ராஜா உள்ளிட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஹசிகலாவுக்கு சாதகமாக நடப்பதைப் போலக் காட்டிக் கொண்டு, எடப்பாடி பழனிசாமியின் பக்கம் ஓ.பி.எஸ் நிற்கிறார். தேர்தல் தோல்வியை மறைக்கும் வகையில் சசிகலா என்ற நாடகத்தை இருவரும் அரங்கேற்றியுள்ளனர்" என்கிறார் அ.தி.மு.க முன்னாள் செய்தித் தொடர்பாளர் பெங்களூரு புகழேந்தி.






**தம்பியை நீக்கிய ஓ.பி.எஸ்**

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல், ஊரக உள்ளாட்சித் தேர்தல் ஆகியவற்றைத் தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலிலும் அ.தி.மு.க தோல்வியை சந்தித்தது. இதையடுத்து, "அ.தி.மு.கவில் அ.ம.மு.கவை இணைத்து கட்சி ஒற்று மையாக செயல்பட வேண்டும்" என் றொரு தீர்மானம் தேனி மாவட்ட அ.தி. மு. கவில் நிறைவேற்றப்பட்டது. அதுவும் ஓ.பன்னீர்செல்வத்தின் பண்ணை வீட்டில் நடந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சையதுகான், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி ஓ.பி.எஸ் கையில் கொடுத்தார்.

இதன் தொடர்ச்சியாக திருச்செந்தூருக்கு வந்த வி.கே.சசிகலாவை ஓ.பன்னீர் செல்வத்தின் தம்பி ஓ.ராஜா சந்தித்துப் பேசிய காணொலி காட்சிகள் வைரலானது. இதையடுத்து கட்சியில் இருந்தே ஓ.ராஜா நீக்கப்பட்டார். சசிகலா செல்லும் இடங்களில் எல்லாம் வரவேற்பு கிடைத்தாலும், அ.தி.மு.க தரப்பில் இருந்து எந்த அசைவும் கிளம்பவில்லை. இதுகுறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். அதில், "எனது சுற்றுப்பயணத்தில் தொண்டர்களின் எதிர்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் அறிந்துகொள்ள முடிந்தது. நம் இயக்கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று அனைவரும் முழக்கம் எழுப்புகிறீர்கள். என் மீது வைத்த இந்த அசைக்க முடியாத நம் பிக்கை வீண் போகாத வகையில் உங்கள் அனைவருக்காகவும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும் என்னுடைய எஞ்சிய வாழ்நாளை அர்ப்பணிப்பேன்" எனக் கூறியிருந்தார்.

**ஓ.பி.எஸ். செய்த துரோகம்**

சட்டமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு சசிகலாவுக்கு ஆதவராக கருத்து தெரிவித்த பலரும் அ.தி.மு.கவைவிட்டு நீக்கப்பட்டனர். அந்தவகையில், முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா, பெங்களூரு புகழேந்தி, ஓ.ராஜா, அஸ்பயர் சுவாமிநாதன் உள்ளிட்டோர், கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் உள்ள தனியார் விடுதியில் ஆலோசனை மேற்கொண்டனர். இந்தக் கூட்டத்தில், "சசிகலாவையும் இணைத்துக் கொண்டு அ.தி.மு.க ஒற்றுமையாக செயல்பட வேண்டும்" என்பதை வலியுறுத்திப் பேசியுள்ளனர். விரைவில், அ.தி.மு.க தலைமைக்கு எதிராக மாவட்டங்களில் போராட்டம் நடத்துவது தொடர்பாக வும் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

"எதற்காக இப்படியொரு கூட்டம்?" என அ.தி.மு.க முன்னாள் செய்தித் தொடர்பாளர் பெங்களூரு புகழேந்தி யிடம் பிபிசி தமிழ் சார்பில் கேட்டோம். "எடப்பாடி பழனிசாமி ஆட்சிக்கு எதிராக சட்டசபையில் வாக்களித்தவர்தான் ஓ.பன்னீர்செல்வம்தான். இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இதையும் மீறி பா.ஜ.கவின் முயற்சியால் இரண்டு பேரும் ஒன்று சேர்ந்தனர். ஆனாலும், ஆட்சிக்கு எதிராக ஓ.பி.எஸ் செய்த துரோகத்தை மறந்துவிடக் கூடாது" என்கிறார்.

"தேனி மாவட்ட அ.தி.மு.க செயலாளர் சையதுகான், பன்னீர்செல்வம் என்ன சொல்கிறாரோ அதைத்தான் செய்வார். அவர் மாவட்ட செயலாளராக தொடர்ந்து பதவியில் இருக்கிறார். அந்தவகையில் பன்னீர்செல்வத்தை கலந்து ஆலோசிக்காமல் இப்படியொரு தீர்மானத்தை சையதுகான் போடுவதற்கு வாய்ப்பில்லை. இப்படியொரு தீர்மானத்தை இயற்றுமாறு ஓ.பி.எஸ்தான் கூறியுள்ளார். அதனை நம்பி சசிகலாவை சந்திக்கச் சென்ற ஓ.ராஜாவை கட்சியில் இருந்தே நீக்கிவிட்டார். அப்படிப் பார்த்தால், தேனி தீர்மானத்துக்குக் காரண மானவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?" எனக் கேள்வி யெழுப்பும் புகழேந்தி.

**திட்டமிட்டே நடத்தப்படும் நாடகம்**

"தற்போது ஓ.பி.எஸ்ஸும் இ.பி.எஸ்ஸும் வழக்கம்போல பேசிக் கொள்கின்ற னர். இந்த விவகாரத்தில் திட்டமிட்டே நாடகம் நடத்தப்படுவதாகத்தான் பார்க்கிறோம். கட்சிக்குள் சசிகலா வராமல் இருப்பதற்கான அனைத்து வேலைகளையும் ஓ.பி.எஸ் செய்கிறார். அவர் அ.தி.மு.கவின் ஒருங்கிணைப்பாளராக தொடர்ந்து நீடிக்க விரும்புகிறார். சசிகலாவுக்கு சாதகமாக பேசுவது போலக் காட்டிக் கொண்டு, எடப்பாடி பழனிசாமிக்கு சாதகமாக நடந்து கொள்கிறார்" என்கிறார்.

"கூட்டத்தில் என்ன பேசப்பட்டது?"" என்றோம். கட்சி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. கூட்டத்தில் அன்வர்ராஜா பேசும்போது, "அனைவரும் மனம்திருந்தி வந்து விடுவார்கள்" என்றார். ஓ.ராஜா பேசும் போது, "அண்ணன் ஓ.பி.எஸ்ஸின் நடவடிக்கைகள் சரியில்லை. நீண்டகால மாக இப்படித்தான் ஏமாற்றி வருகிறார். வரும் நாள்களில் அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களோடு சசிகலாவையும் கொண்டு வந்து நிறுத்துவோம். இதற் கான வேலைகளில் விரைவில் இறங்க வேண்டும்" என்றார்.

இந்த விவகாரத்தில் சசிகலாவிடம் நாங்கள் வைக்கும் வேண்டுகோள் ஒன்று தான். அ.தி.மு.கவின் பொதுச்செயலா ளர் பதவி தொடர்பாக சிவில் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில், கட்சியின் பொதுச் செயலாளராக மற்றவர்களுக்கு அவர் பொறுப்புகளை அறிவிக்க வேண்டும். ஹநீதிமன்றத் தீர்ப்பு வரும் போது பார்த்துக் கொள்ளலாம்" எனக் கூற இருக்கிறோம். அ.தி.மு.கவில் சசிகலாவையும் இணைத்த பிறகு ஒரு தலைமையை உருவாக்க வேண்டும் என்பது தான் எங்களின் கோரிக்கை" என்கிறார்.

**மேற்கு மண்டலங்களில் ஆர்ப்பாட்டம்**

"சசிகலாவை சந்திக்கும் எண்ணம் உள்ளதா?" என்றோம். "தற்போது செயல்பாடில்லாமல் அ.தி.மு.க தலைமை உள்ளது. அதைப் பற்றி தலைமையில் உள்ளவர்களுக்குக் கவலையில்லை. மிக விரைவில் சசிகலாவை சந்திப்பதற்கான வாய்ப்பு உள்ளது. ஒரு நல்லெண்ண அடிப்படையில் அவரைச் சந்திக்க இருக்கிறோம். சசிகலாவை இணைக்கும் முயற்சியில் எடப்பாடி பழனிசாமி இறங்கி வருவார் என்ற நம்பிக்கை இல்லை" என்கிறார்.

மேலும், "அ.தி.மு.கவின் தோல்வியை திசைதிருப்புவதற்காக சசிகலா விவகாரத்தை ஓ.பி.எஸ் கையில் எடுத்துள்ளார். ஓ.பி.எஸ், இ.பி.எஸ் ஆகிய இருவரும் பேசி வைத்துக் கொண்டு செயல்படுவதாகப் பார்க்கிறோம். இவர்களின் செயல்பாட்டைக் கண்டித்து கோவை, சேலம், மதுரை உள்பட பல மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தும் திட்டமும் உள்ளது" - என்கிறார்.

**தி.மு.கவில் சேரவே கூட்டம் நடத்துகிறார்கள்**

அ.தி.மு.க தலைமைக்கு எதிராக நடத்தப்பட்ட கூட்டம் குறித்து, அக்கட்சியின் செய்தித் தொடர்பாளரும் வழக்கு ரைஞருமான பாபு முருகவேலிடம் பேசினோம். "கூட்டம் நடத்தியவர்கள் அனைவரும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக கட்சியில் இருந்தே நீக்கப்பட்டவர்கள். அவர்களுக்கும் கட்சிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இவர்கள் சசிகலாவின் ஆதரவாளர்களும் இல்லை. இவர்களின் பெயரைக் குறிப்பிட்டு, "எனது ஆதரவாளர்கள்" என எங்கேயும் சசிகலாவும் குறிப்பிட்டதில்லை. தி.மு.கவுக்கு செல்வதற்காகத்தான் இவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டம் நடத்தியுள்ளனர்" என்கிறார்.

"ஓ.பி.எஸ்ஸுக்கு தெரிந்துதான் தேனியில் தீர்மானம் போடப்பட்டது என்கிறார்களே?" என்றோம். "தனக்குத் தெரிந்துதான் தீர்மானம் போடப்பட்டதாக எந்த இடத்திலும் ஓ.பி.எஸ் சொல்லவில்லை. அவருக்குத் தெரிந்து தீர்மானம் போட்டிருந்தால் தனது தம்பியான ஓ.ராஜாவை கட்சியைவிட்டு நீக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது? தன்னுடைய நிலைப்பாட்டில் ஓ.பி.எஸ் தெளிவாக இருக்கிறார் என்பதைத்தான் இது காட்டுகிறது. அவர் பதில் சொல்லாததால் அவருக்கு இதில் விருப்பம் உள்ளதாகப் பேசுவது என்பது தவறானது" என்கிறார்.


மேலும், "அவர்கள் எந்தவகைகளில் வேண்டுமானாலும் போராட்டம் நடத்தட்டும். 72 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அ.தி.மு.கவில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டன. எஸ்.டி.சோமசுந்தரம், நால்வர் அணி, ஜானகி - ஜெயலலிதா அணி, ஓ.பி.எஸ் - இ.பி.எஸ் என இந்த இயக்கம் சந்திக்காத பிளவுகளே இல்லை. ஆனாலும். தொடர்ந்து தொய்வில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடந்த முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் 26 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளோம். இவர்களைப் போன்ற சிலரின் சலசலப்புகளால் இந்த இயக்கத்துக்கு எந்தவித பாதிப்பும் வரப்போவதில்லை" என்கிறார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

**33.** ஆறு இடங்கள் தொடர்புபடும் பாதையின் வரைபடம் தரப்பட்டுள்ளது. அம்புக்குறியால் காட்டப்படுவது பயணம் செய்யக் கூடிய திசைகள் ஆகும்.




ஒருவர் பேருந்து நிலையத்திலிருந்து அலுவலகம் வரை செல்வதற்கு ஒன்றுக்கொன்று வேறுபட்ட எத்தனை பாதைகள் உள்ளன?

(1) 7 (2) 8 (3) 9


**34.** ஒவ்வொரு பூவிலும் ஒரு வண்ணத்துப்பூச்சி இருந்தால் ஒரு வண்ணத்துப்பூச்சிக்கு பூ கிடைக்க மாட்டாது. அதே நேரம் ஒரு பூவில் இரண்டு வண்ணத்துப்பூச்சிகள் இருந்தால் ஒரு பூ எஞ்சியிருக்கும் எனின் அங்குள்ள பூக்களினதும் பூச்சிகளினதும் எண்ணிக்கை யாது?

(1) பூக்கள் - 6 வண்ணத்துப்பூச்சிகள் - 8

(2) பூக்கள் - 5 வண்ணத்துப்பூச்சிகள் - 10

(3) பூக்கள் - 3 வண்ணத்துப்பூச்சிகள் - 4


**35.**




தரப்பட்ட உருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகளினதும் செவ்வகங்களினதும் எண்ணிக்கைகள் முறையே

(1) 8, 5 (2) 10, 3 (3) 8, 3

**36.** சம அளவிலான ஆறு பக்கங்களைக் கொண்ட வடிவமொன்று மூன்று தடவைகள் மடிக்கப்பட்டு துளைகள் இடப்பட்ட வடிவம் முன்னே தரப்பட்டுள்ளது. அதனை விரித்துப் பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?




**37.** குற்றிகள் சில ஒன்றன் மீதொன்று அடுக்கப்பட்ட வடிவம் அருகே தரப்பட்டுள்ளது. இதனை முன்னாலிருந்து பார்க்கும் போது கண்ணுக்குப் புலப்படாத குற்றிகளின் எண்ணிக்கை யாது?



(1) 8 குற்றிகள்

(2) 10 குற்றிகள்

(3) 12 குற்றிகள்


**38.** ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

A - பயன்படும் B - பலவகையில் C - மரங்களை D - காப்பது



E - வளர்த்துக் F - கடமையாகும் G - நம் H - எமக்குப்

(1) H B A C G D F E (2) G C A B H E F D (3) H B A C E D G F

**39.** தாளில் இருந்து பென்சிலை எடுக்காமல் கீறக்கூடிய உரு எது?




## விடைகள்

| | | |
|---|---|---|
| 33. | (2) | 8 |
| 34. | (3) | பூக்கள் - 3<br>வண்ணத்துப்பூச்சிகள் - 4 |
| 35. | (3) | 8, 3 |
| 36. | (1) |  |
| 37. | (2) | 10 குற்றிகள் |
| 38. | (3) | H B A C E D G F |
| 39. | (1) |  |
| 40. | (2) | அ, ஈ, ஆ, உ, இ, ஊ |

### கல்வி tv CHANNEL-1
### 15.03.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2
### 15.03.2022 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசாங்கத்தை வெளியேறினால் சு.க. நடுத் தெருவில்தான் நிற்கவேண்டும்!

## பெரமுனவின் மட்டக்களப்பு அமைப்பாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு, மார்ச் 15

**"ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் நடுத் தெருவில்தான் நிற்க வேண்டும்" என பொதுஜன பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.**

இந்த அரசாங்கத்தில் இணைந்திருக்கும்போதுதான் அவர்களுக்கு வாழ்க்கை எனவும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு, பட்டிருப்புத் தொகுதிக்கான இளைஞர் மாநாடு, பெரிய போரதீவிலுள்ள தனியார் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண சபையில் ஒரு தமிழரை முதலமைச்சராக்கியது மஹிந்த ராஜபக்ஷதான். ஆனால், நல்லாட்சி அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்தவர்கள், வேறு யாருக்கோ முதலமைச்சர் பதவியைக் கொடுதார்கள்.

தற்போது நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால், வெளிநாடுகளைப் போன்று கொரோனாவால் அதிகப் பேர் மரணித்திருப்பார்கள். எமது அரசாங்கம், மக்களின் உயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுகின்றது.

எவர் வந்தாலும் கூச்சலிடலாமே தவிர, நாட்டைக் கொண்டு நடத்த முடியாது. நாட்டைக் கொண்டு நடத்தக் கூடிய சக்தி, மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு மாத்திரமே உள்ளது. எல்லா நாடுகளிலும் பிரச் னைகள் உள்ளன. வெளிநாடு களிலும் 4 மடங்கு பொருள்களுக்கு விலைகள் அதிகரித்துள்ளன. ஏற்கெனவே, பாதாளத்துக் குச்சென்ற நாட்டைத்தான் எமது ஜனாதிபதி பொறுப்பேற்று வழிநடத்தி வருகின்றார்-என்றார். (அ)



# கைத்தொலைபேசிகள் திருட்டு; பெண் உட்பட நால்வர் கைது!

மட்டக்களப்பு, மார்ச் 15

காத்தான்குடியில் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்தில் கொள்ளையிட்ட பெண் உட்பட 4 பேரை, நேற்று முன்தினம் கைதுசெய்ததாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான 23 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி, காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள கையடக்க தொலைபேசி நிலையம் பூட்டியிருந்த நிலையில், அதை உடைத்து அங்கிருந்த சுமர் 24 இலட்சம் ரூபாய் பெறுமதியான 75 கையடக்கத் தொலைபேசிகள் திருடப்பட்டன.

இது தொடர்பான ஆரம்ப பொலிஸ் விசாரணையில் அக்கரைப்பற்றுச் சேர்ந்த ஒருவர் 12 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைதுசெய்யப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து, இறக்காமத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட மூவர் 11 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த திருட்டுச் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி தப்பியோடியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது டன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஆளும் அரசு தோல்வியை ஏற்று உடனே பதவி விலகவேண்டும்!

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 15

நாட்டை நிர்வகிக்க முடியாமல் பொருளாதாரத்தை அதல பாதாளத்துக்கு கொண்டு சென்ற ஆளும் அரசு தன் தோல்வியை ஏற்று பதவி விலகவேண்டுமென கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

இனவாதம் , மதவாதத்தை மூலதனமாகக் கொண்டு ஆட்சி பீடம் ஏறிய அரசாங்கம் சிறந்த திட்டமிடல் இன்மையாலும் அதிக கடன், ஊழல் மோசடிகளாலும் அதல பாதாளத்திற்கு தள்ளிய பொருளாதாரத்தை, இன்னும் 25 வருடங்கள் சென்றாலும் எம்மால் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொருட்களின் தட்டுப்பாடு, எங்கும் வரிசைகள், கட்டுப்பாடு இல்லாத விலை ஏற்றம், பணவீக்கம், டொலர் தட்டுப்பாடு என பட்டியல்கள் நீண்டு கொண்டு செல்லும் இந்நிலையில் மேலும் இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடிக்க எம்மால் அனுமதிக்க முடியாது.

ஆகவே தமது தோல்வியை ஏற்று இந்த அரசு தாமாக பதவி விலகிச் செல்லாத பட்சத்தில் இந்த அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்காக தொடர் போராட்டக் களத்தில் பொது மக்கள் இறங்குவதை தடுக்கவே முடியாது-என்றுள்ளது. (அ)




# இலங்கை தபால், தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் 52ஆவது மாநாடு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, மார்ச் 15

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் 52ஆவது மாநாடு, மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பாளர் சங்கத்தின் தலைவர் என்.இதயக்கமலன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், இலங்கை தபால் மற்றும் தொலைத் தொடர்பாளர் சங்கத்தின் தலைவர் சாந்தகுமார மீகம, உதவிச் செயலாளர் திலகரட்ன யட்டவர, நிர்வாக குழு உறுப்பினர் சோபா ரட்ன, தபால் சேவைகள் திணைக் களத்தின் கிழக்கு மாகாண பிரதிப் பணிப்பாளர் திருமதி ஜெ.திருச்செல்வம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டுக்கான கூட்டத்தின் கூட்டறிக்கை மற்றும் கணக்கறிக்கை வாசிக்கப்பட்டு, சங்க உறுப்பினர்களினால் அங்கிகரிக்கப் பட்டதை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அத்துடன், 2022 மற்றும் 2013ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவுக்கான தேர்தலும் நடத்தப்பட்டு உறுப்பினர்கள் வாக்களிக்கும் நிகழ்வும் நடைபெற்றதை தொடர்ந்து, புதிய ஆண்டுக்கான நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டனது.

இதனடிப்படையில் புதிய தலைவராக மீண்டும் முன்னாள் தலைவர் என்.இதயக்கமலன் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக ஜி.ரஞ்சித் தெரிவுசெய்யப்பட்டார்.

பத்து பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன், பொருளாளர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். (அ)

# திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த அமெ. போர்க்கப்பல்

திருமலை, மார்ச் 15

திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த யு.எஸ்.எஸ். பிட்ஸ்கிரால்ட் கப்பல் இலங்கை கடற்படையினரால் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டது.

யு.எஸ்.எஸ். பிட்ஸ்கிரால்ட் 160 மீற்றர் நீளம் மற்றும் மொத்தம் 300 அடி அகலம் கொண்டது.

யு.எஸ்.எஸ். பிட்ஸ்கிரால்ட் இங்கு தங்கியிருக்கும்போது, இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையே நட்புறவையும் அறிவையும் பரிமாறிக் கொள்வதற்காக இலங்கை கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட பல் வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளது. (அ)





## கனடாவில் இடம்பெற்ற விபத்தில் 5 இந்திய மாணவர்கள் உயிரிழப்பு!

ரொரன்றோ, மார்ச் 15

கனடா - ரொரன்றோவில் இடம்பெற்ற விபத்தில் இந்திய மாணவர்கள் ஐவர் பலி கனடா - ஒன்ராறியோ மாகாணம், ரொரன்டோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி 5 இந்திய மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 2 பேர் படுகாயம் அடைந்து நகர மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதனை கனடாவுக்கான இந்திய தூதுவர் அஜய் பிசாரியா நேற்று திங்கட்கிழமை உறுதிப்படுத்தியுள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாக அஜய் பிசாரியா நேற்று காலை ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இறந்த மாணவர்கள் ஹர்பிரீத் சிங், ஜஸ்பிந்தர் சிங், கரன் பால் சிங், மோஹித் சவுகான் மற்றும் பவன் குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக ரொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஒன்ட்டின் குயின்ட் வெஸ்ட், நெடுஞ்சாலை 401 இல் வான் - கனரக சரக்கு வாகனம் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்த மற்றும் காயமடைந்த மாணவர்கள் அனைவரும் 21 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவர்கள் அனைவரும் கிரேட்டர் ரொரன்ரோ மற்றும் மொன்றியல் பகுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்தவர்கள் என ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் எனவும் நேற்று காலை தனது ருவிட்டரில் அவர் குறிப்பிட்டார். (அ)

### ரஷ்ய படைகளிடமிருந்து

# அணுமின் நிலையத்தை நாம் மீட்டுவிட்டோம்!

### உக்ரைன் அரசு அறிவிப்பு

கீவ், மார்ச் 15

செர்னோபில் அணுமின் நிலையத்தை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்டுவிட்டதாக உக்ரைன் அரசு சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடம் கூறியுள்ளது.

உக்ரைன் மீது ராணுவ நடவடிக்கை எடுத்துள்ள ரஷ்ய படைகள் தொடர்ந்து 19ஆவது நாளாக நேற்று தாக்குதல் நடத்தது. உக்ரைனின் பல்வேறு நகரங்களை தொடர்ச்சியாக கைப்பற்றி வரும் ரஷ்ய படைகள் தலைநகர் கீவ்வை கைப்பற்றுவதில் மும்முரம் காட்டி வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்பு செர்னோபில் அணு உலை பகுதியை ரஷ்ய ராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக உக்ரைன் கூறியிருந்தது.

செர்னோபில் அணு உலையில் மின்வசதிகளைத் தரும் கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாகவும் விரைந்து அதைச் சரி செய்யாவிட்டால் அணு எரிபொருள் சேமிப்பு வசதியின் குளிரூட்டும் அமைப்புகளிலிருந்து அதிகப்படியான கதிர்வீச்சு வெளியேறும் அபாயம் இருப்பதாகவும் உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர்



தெரிவித்திருந்தார். மேலும், அவர் ரஷ்யாவின் இந்த ஆபத்தான நடவடிக்கைகள் ஐரோப்பாவை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளதாகக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் 4 நாள்களுக்குப் பிறகு ரஷ்ய கட்டுப்பாட்டில் இருந்த செர்னோபில் அணுமின்நிலையம் மீட்கப்பட்டதாக உக்ரைன் அணுசக்தி நிறுவனம் அறிக்கை அளித்துள்ளதாக சர்வதேச அணுசக்தி நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் உக்ரைன் அணுசக்தி நிறுவனம், செர்னோபில் அணுமின் நிலையத்தில் பழுதான மின்இணைப்பின் ஒரு பகுதியை சரிசெய்துவிட்டதாகவும் இப்போது அணுமின் நிலையத்துக்கு தேவையான மின்சாரம் முழுவதையும் வழங்க முடியும் என்றும் தகவல் அளித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். தற்போது செர்னோபில் அணுமின் நிலையம் தொடர்ந்து டீசல் ஜெனரேட்டரில் இயங்கி வருவதாகவும் விரைவில் உக்ரைன் அரசின் மின்துறை இணைப்பில் இணைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மலேசியா, பிலிப்பைன்ஸில் அதிகாலையில் நிலநடுக்கம்!

கோலாலம்பூர், மார்ச் 15

மலேசியா மற்றும் பிலிப்பைன்ஸில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து 504 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவானதாக நில அதிர்வு கண்காணிப்பு தேசிய மையம் தெரிவித்துள்ளது.

சக்தி வாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் குலுங்கின. நிலநடுக்கம் நன்கு உணரப்பட்டதால் பீதியடைந்த மக்கள் அவசர அவசரமாக வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

எனினும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் சேத விவரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

அதேபோல் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலா லூசன் தீவு பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவாகியுள்ளது. மணிலாவிலிருந்து 157 கிலோ மீற்றர் தொலைவில் நிலநடுக்கம் உணரப்பட்டது.

இதேவேளை, வங்கக்கடல் பகுதியில் அமைந்துள்ள அந்தமானின் போர்ட் பிளேர் நகரில் நேற்று முன் தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் 4.1 ஆக பதிவாகியது. இது அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளுக்கு வடக்கு - வடகிழக்கு 220 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டதாக தேசிய புவியியல் மையம் தெரிவித்திருந்தது . (அ)



## போலந்து எல்லைக்கு அருகே ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்!

வார்சோ, மார்ச் 15

போலந்து எல்லைக்கு அருகில் உள்ள உக்ரைன் இராணுவ தளத்தின் மீது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட ரஷ்ய ஏவுகணை தாக்குதல், நேட்டோவை அச்சுறுத்தும் முயற்சி என்று போலந்தின் துணை வெளியுறவு அமைச்சர் மார்சின் பிரசிடாக்ஸ் தெரிவித்துள்ளார்.

மேற்கத்திய இராணுவக் கூட்டணியின் உறுப்பினரான போலந்தின் எல்லையில் இருந்து 20 கி.மீ தொலைவில் உள்ள யாவோரிவ் பயிற்சித் தளத்தில் நடந்த தாக்குதலில் குறைந்தது 35பேர் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில், ரஷ்யாவின் இந்த நடவடிக்கை மிகவும் ஆத்திரமூட்டும் செயல் என்று பிரசிடாக்ஸ் கூறியுள்ளார்.

மேலும், 'இந்த இராணுவத் தளம் போலந்து எல்லைக்கு மிக அருகாமையில் அமைந்திருந்தது அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்' என்று கூறினார். (அ)

## ஒபாமாவுக்கு கொரோனா தொற்று!

நியூயோர்க், மார்ச் 15

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தனக்கு கொரோனா தொற்று உறுதியானதை தனது ருவிட்டர் பக்கத்தில் ஒபாமா உறுதி செய் துள்ளார்.

கடந்த சில நாட்களாக தொண்டை வலியால் அவதிப்பட்டு வந்த நிலையில் கோவிட் பரிசோதனை செய்ததில் தொற்று உறுதியானதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தனது மனைவி மிச்செலுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி இல்லை என முடிவு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் இருவரும் பூஸ்டர் உட்பட 3 தடுப்பூசிகளையும் போட்டுள்ளோம். எங்களுக்கு கடும் அறிகுறிகள் ஏதும் இல்லை. அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளுங்கள் என்றும் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவில் தொற்று நோய் நெருக்கடி குறைந்து வரும் நிலையில் நகரங்கள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்தால்



விதிக்கப்பட்ட பெரும்பாலான பொது சுகாதார கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் தினசரி சராசரியாக சுமார் 35,000 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. ஜனவரி நடுப்பகுதியில் தினசரி சராசரி 800,000 என்ற அளவுக்கு இருந்தது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின்படி அமெரிக்காவின் இதுவரை 967,000 க்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் இறந்துள்ளனர். 79.5 மில்லியனுக்கு அதிகமானவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 1,000 உக்ரைனிய அகதிகளை வரவேற்க தயாராகும் வேல்ஸ்!

லண்டன், மார்ச் 15

குறைந்தது 1,000 உக்ரைனிய அகதிகளை கவனிக்க வேல்ஸ் திட்டமிட்டுள்ளதாக, வேல்ஸ் முதலமைச்சர் மார்க் டிரேக்போர்ட் தெரிவித்துள்ளார்.

எனினும், வேல்ஸ் பொறுப்பேற்கும் அகதிகளின் எண்ணிக்கையை மொத்தமாக கணக்கிட முடியாது என அவர் மேலும் கூறினார்.

வேல்ஸ் ஒரு புகலிட தேசமாக இருக்கவேண்டும் என்று தான் விரும்புவதாகவும், முதல் கட்ட தீர்மானத்தை எடுப்பதற்கான திட்டங்கள் இப்போது இருப்பதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மார்க் டிரேக்போர்ட்டும் ஸ்கொட்லாந்தின் முதலமைச்சர் நிக்கோலா ஸ்டர்ஜனும் உக்ரைனிய அகதிகளை விரைவாகக் குடியமர்த்தவும், அவர்களைக் கவனித்துக்கொள்ளவும் 'சூப்பர் ஸ்பொன்சர்கள்' ஆக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் புதிய மைல்கல்!

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் டேல் ஸ்ரெய்னைத் கடந்தார் அஸ்வின்.

இலங்கைக்கு எதிரான மொஹலி டெஸ்டில் 6 விக்கெட்கள் எடுத்ததோடு துடுப்பாட்டத்திலும் அரைச் சதம் கடந்து அசத்தினார் அஸ்வின்.

அவர் முன்னதாக டெஸ்ட் கிரிக்கெட்டில் கபில் தேவ் எடுத்திருந்த 434 விக்கெட்களைத் தாண்டி சென்று, 436 விக்கெட்களுடன் அதிக டெஸ்ட் விக்கெட்கள் எடுத்த இந்திய வீரர்களில் 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்நிலையில் பெங்களூர் டெஸ்டில் மேலும் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். முதல் இனிங்ஸில் 2 விக்கெட்களை வீழ்த்திய அஸ்வின், நேற்று குசல் மெண்டிஸை 54 ஓட்டங்களிலும் தனஞ்சஜ டி சில்வாவை 4 ஓட்டங்களிலும் வீழ்த்தினார். இதையடுத்து 93 டெஸ்ட்களில் 439 விக்கெட்களை வீழ்த்திய டேல் ஸ்ரெய்னை கடந்தார்.

இதுவரை டெஸ்ட் கிரிக்கெட்டில் 86 போட்டிகளில் 440 விக்கெட்கள் எடுத்துள்ளார் அஸ்வின். இதன்மூலம் அதிக டெஸ்ட் விக்கெட்கள் எடுத்த வீரர்களின் பட்டியலில் 8ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.



# இங்கிலாந்து அணி தொடர் தோல்வி!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மகளிர் உலகக கிண்ணப் போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து தோல்வியடைந்துள்ளது.

நியூசிலாந்தில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி, களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இங்கிலாந்து அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 235 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீராங்கனை டமி பியூமாண்ட் 62 ஓட்டங்களும் விக்கெட் காப்பாளர் எமி ஜோன்ஸ் 53 ஓட்டங்களும் எடுத்தார்கள்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் மரிஸேன் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இலக்கைக் கவனமாக விரட்டி கடைசி ஓவரில் வெற்றியடைந்தது தென்னாபிரிக்கா. பரபரப்பாக முடிந்த ஆட்டத்தில் 49.2 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்தது.

தொடக்க வீராங்கனை லாரா 77 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு முக்கிய பங்களித்தார்.

2000ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக இங்கிலாந்தை உலகக்கிண்ணப் போட்டியில் வீழ்த்தியது தென்னாபிரிக்கா.

மேலும் நடப்பு சம்பியனான இங்கிலாந்து இந்த உலகக் கிண்ணத்தில் விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது. (ஐ)

# இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் சிமோனா, ஸ்வியாரெக் வெற்றி!

கலிபோர்னியா, மார்ச் 15

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனைகளான ருமேனியாவின் சிமோனா ஹாலேப், போலந்தின் இகா ஸ்வியாரெக், ஜேர்மனியின் கெர்பர் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இந்தியன்வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது. இதில் நேற்று நடந்த போட்டிகளில் ஒன்றில், சிமோனா ஹாலேப், அமெரிக்காவின் கௌப் ஆகியோர் மோதினர்.

இந்தப் போட்டியில் 6 -3, 6 - 4 என்ற செற் கணக்கில் சிமோனா இலகுவெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் கசட்கினாவை எதிர்த்தாடினார். இந்தப் போட்டயில் கெர்பர் 6-2,



6-1 என்ற கணக்கில் இலகு வெற்றி பெற்றார்.

இன்னொரு போட்டியில் போலாந்தின் இகா ஸ்வியாரெக் சுவிற்சர்லாந்தின் ரவுசனை எதிர்த்தார். கடும் போட்டியாக அமைந்த இந்தப் போட்டியில் இகா முதல் செற்றி 6 - 7 (3-7) என்ற கணக்கில் தோல்வியடைந்தார். ஆனால், அடுத்த இரு செற்களையும் 6 -2, 6 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

# பாகிஸ்தானுக்கு இமாலய இலக்கை நிர்ணயித்தது ஆஸி.

கராச்சி, மார்ச் 15

பாகிஸ்தானுக்கு எதிராக கராச்சி தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா மிகவும் பலம்வாய்ந்த நிலையில் இருக்கின்றது.

இரண்டு நாட்கள் முழுவதும் திறமையாக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை ஆட்ட நேர முடிவில் 8 விக்கெட்களை இழந்து 505 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

ஆரம்ப வீரர் உஸ்மான் கவாஜா நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடி குவித்த அபார சதம், ஸ்டீவ் ஸ்மித் மற்றும் அலெக்ஸ் ஹரி ஆகிய இருவரும் பெற்ற அரை சதங்கள் என்பன அவுஸ்திரேலியாவின் மொத்த எண்ணிக்கைக்கு வலு சேர்த்தன.

முதலாம் நாள் ஆட்டத்தில் 251 ஓட்டங்களைக் குவித்த அவுஸ்திரேலியா இரண்டாம் நாள் ஆட்டத்தில் மேலும் 255 ஓட்டங்களைப் பெற்றது. முதலாம் நாள் ஸ்டீவ் ஸ்மித் 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்திருந்தார்.

போட்டியின் இரண்டாம் நாளான ஞாயிற்றுக் கிழமை காலை தனது முதல் இன்னிங்ஸை 3 விக்கெட் இழப்புக்கு 251 ஓட்டங்களில் இருந்து தொடர்ந்த அவுஸ்திரேலியா 2ஆம் நாளன்று முழுவதும் துடுப்பெடுத்தாடியது.

உஸ்மான் கவாஜா 127 ஓட்டங்களிலிருந்தும், நெதன் லயன் ஓட்டம் எதுவும் இன்றியும் தங்களது துடுப்பாட்டங்களை இரண்டாம் நாள் தொடர்ந்தனர்.

இருவரும் 4ஆவது விக்கெட்டில் 54 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் நெதன் லயன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சீரான இடைவெளியில் 3 விக்கெட்கள் வீழ்ந்தன.

ட்ராவிஸ் ஹெட் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் கவஜா ஆட்டமிழந்தார்.

ஒன்பது மணித்தியாலங்களுக்கு மேல் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய உஸ்மான் கவாஜா 369 பந்துகளை எதிர்கொண்டு 15 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 160 ஓட்டங்களைப் பெற்றார்.

கெமரன் க்றீன் 28 ஓட்டங்களுடன் 7ஆவதாக ஆட்டமிழந்தபோது மொத்த எண்ணிக்கை 405 ஓட்டங்களாக இருந்தது.

அப்போது ஜோடி சேர்ந்த அலெக்ஸ் ஹரி, மிச்செல் ஸ்டார்க் ஆகிய இருவரும் 33 ஓவர்கள் தாக்குப்பிடித்து 8ஆவது விக்கெட்டில் 98 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். அதுவரை சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அலெக்ஸ் ஹரி 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் மிச்செல் ஸ்டார்க் (28 ஆ.இ.), அணித் தலைவர் பெட் கமின்ஸ் (0) ஆகிய இருவரும் 2 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி இரண்டாம் நாள் ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

பாகிஸ்தான் பந்துவீச்சில் பாஹீம் அஷ்ரப் 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சஜித் கான் 151 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



# மகளிர் உலகக் கிண்ணம் பங்களாதேஷ் அணி வெற்றி!

ஹமில்டன், மார்ச் 15

பெண்கள் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் முதல் வெற்றியை அடைந்துள்ளது பங்களாதேஷ்.

அதேசமயம், பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தில் தொடர்ச்சியாக 18 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது.

ஹமில்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் மகளிரின் அதிகூடிய ஒருநாள் ஓட்டமாக இது அமைந்தது. பர்கனா 71 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தானின் நஷாரா 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

பாகிஸ்தான் அணியின் இனிங்ஸில் தொடக்க வீராங்கனை சிட்ரா அமீன் 104 ஓட்டங்கள் எடுத்தார்.

எனினும் பாகிஸ்தான் அணியால் 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 225ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

தொடக்க வீராங்கனைகள் 91 ஓட்டங்கள் வரைக்கும் கூட்டணி அமைத்தார்கள். 8 ஓவர்கள் மீதமிருந்தபோது 183ஃ2 என வலுவான நிலையில் இருந்தது பாகிஸ்தான். எனினும், கடைசிக்கட்டத்தில் இதர துடுப்பாட்ட வீராங்கனைகளளால் இலக்கை ஒழுங்காக விரட்ட முடியாமல் போனது. உலகக் கிண்ணத் தொடரில் முதன்முறையாக விளையாடும் பங்களாதேஷ் அணி, தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது. எனினும் பாகிஸ்தான் அணி கடந்த 18 உலகக்கிண்ணப் போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளது.



# களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் நேற்று அடையாள பணிப்புறக்கணிப்பு

களுவாஞ்சிக்குடி, மார்ச் 15

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை முன்பாக நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரையில் தாதியர்கள் பதாகைகளை ஏந்திய வாறு பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய அமைச்சரவை பத்திரத்தை வழங்கு, திருத்திய மைத்த சம்பள முறைமையை தாதிய பட்டதாரிகளுக்கு வழங்கு, சம்பள முரன்பாட்டை நீக்கு, சுகாதார நிருவாக சேவையில் தொழில் வல்லுனர்களை உள்ளடக்கு, விசேட கடமைக் கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாயாக வழங்கு, பதவி உயர்வுகளை தாமதமின்றி வழங்கு உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இதன்போது தாதியர்கள் ஏந்தியிருந்தனர்.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய், மேலதிகநேர கொடுப்பனவை 1/80 ஆல் வழங்கு, சுகாதார நிர்வாக சேவையை உருவாக்கு, 3000 ரூபாவில் இலிருந்து 10000 ரூபா வரை அதிகரி, பட்டதாரி தாதியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கு, பதவி உயர்வுகளை 2010.11.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்து. உள்ளிட்ட கோர்க்கைகளை முன் வைத்தே தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குடும்ப ஆட்சி நடப்பதால் தேசிய அரசு சாத்தியமில்லை!

## இராதாகிருஷ்ணன் எம். பி.

நுவரெலியா, மார்ச் 15

தற்போது குடும்ப ஆட்சி நடந்துகொண்டிருக்கும் இலங்கையில் தேசிய அரசு என்பது சாத்தியப்படாத விடயம். குடும்ப ஆதிக்கமே ஆட்சியில் கோலோச்சியுள்ளது. அதனால் தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர் - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, டொலரின் பெறுமதி அதிகரித்து வருவதால் நாளாந்தம் பொருட்களின் விலை உயர்வடைகின்றது. இதனால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு, போக்குவரத்துறை கூட ஸ்தம்பித்துள்ள நிலை. அதுமட்டுமல்ல சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருட்களை வாங்க வரிசையில் காத்திருக்க வேண்டிய பேரவலம் வேறு.

எனினும், நாட்டை மீட்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு அரசு, நிபுணர்களின் ஆலோசனைகளை உள்வாங்கவில்லை. அது தொடர்பில் ஆட்சியாளர்கள் அலட்டிக்கொள்ளமாட்டார்கள்.

எனவே, இந்த அரசை விரட்டியடித்தால்தான் நாட்டு மக்களுக்கு விமோசனம் கிட்டும்.

தேசிய அரசமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கூற வில்லை. மாறாக தேசிய வேலைத்திட்டம் பற்றியே அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த நாட்டில் குடும்ப ஆட்சியே நிலவுகின்றது. அங்கு பிறரின் கருத்துக்கு இடமில்லை. அதனால்தான் விமல், கம்மன்பில போன்றவர்கள் வெளியேறியுள்ளனர்.

குடும்ப ஆட்சி நடக்கும் சூழ்நிலையில் தேசிய அரசு சாத்தியப்படாது. குடும்பத்தின் திட்டங்களே அமுல்படுத்தப்படும்.

போர் நடைபெறும் உக்ரைனில் வாழும் மக்களைவிட, இலங்கைவாழ் மக்கள் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். " - என்றார். (ஐ)

# பொகவந்தாலவையில் மாணவன் சடலமாக மீட்பு



கொழும்பு, மார்ச் 15

பொகவந்தலாவை - செல்வகத்தைகயிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து பாடசாலை மாணவன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டது.

உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவனின் சடலமே மீட்கப்பட்டாரென பொகவந்தலாவை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவை - செல்வகந்தை பகுதியைச் சேர்ந்த 18 வயதான பாரதிதர்ஷன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

பொகவந்தலாவை - சென் மேரிஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்று போட்டியை கண்டுகளித்து விட்டு வீடு திரும்பிய நிலையில், குறித்த மாணவன் காணாமல் போயுள்ளார்.

மாணவனை நீண்ட நேரம் காணவில்லை என உறவினர்கள் தேடிய நிலையில், குறித்த மாணவனின் சடலம் கிணறொன்றில் இருப்பதை உறவினர்கள் அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பொகவந்தலாவை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

மாணவன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குளவிக்கொட்டு; 62 பேர் பாதிப்பு!

மொனராகலை, மார்ச் 15

மொனராகலை எதிமலை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் 62 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது அங்கிருந்த குளவி கூடு கலைந்ததில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 62 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தேவாலயத்தில் குண்டு மூவரின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 15

கொழும்பு - பொரளை அனைத்து புனிதர் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற மருத்துவர் மற்றும் மேலும் இருவரின் விளக்கமறியல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி பொரளையில் உள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


# மரண அறிவித்தல்

பிறப்பு 27 - 01 - 1943



இறப்பு 12 - 03 - 2022

## திருமதி அல்பிரட் இராஜரெட்ணம் சண்முகவடிவு

(ஏறாவூர் - லண்டன்)

மட்டக்களப்பு, ஏறாவூரை பிறப்பிடமாகவும் ஈஸ்ட்ஹாம் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அல்பிரட் இராஜரெட்ணம் சண்முகவடிவு கடந்த 12.03.2022 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அல்பிரட் இராஜரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி – பிள்ளையம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராஜரெட்ணம், இராசமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராசலெட்சுமி, நாகரெட்ணம், பாஸ்கரன் தருமரெட்ணம், பரமேஸ்வரி மற்றும் நமசிவாயம், கனகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ரெட்ணகுமார் (குமார் – லண்டன்), ஜெயவதனி (வதனி – பிரான்ஸ்), திலகரட்ணம், புனிதவதி (புனிதா – லண்டன்), கோணேஸ்வரன் (முகுந்தன் – லண்டன்), சதானந்தராஜா (பகீரதன் – லண்டன்), சன்முகராஜா (குட்டி – லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வத்சலா (வாணி – லண்டன்), கமலநாதன் (பிரான்ஸ்), புவிதா, புஸ்பாகரன் (லண்டன்), இராஜேஸ்வரி (மோகனா – லண்டன்), லக்ஷ்மி (லண்டன்), தமிழ்ச்செல்வி (ரேகா – லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கிருபைராஜா, தேவராஜா, பத்மினி, சாந்தினி, காமினி, காலஞ்சென்றவர்களான, நாகராஜா, தட்சணாமூர்த்தி, மதியாபரணம், பரமேஸ்வரி, சின்னராசா, சுவேந்திராதேவி, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், நரேஸ், இந்துஜா, நிக்காஷ், நிரோஜன், சோமியா, கணுஜா, வர்ஷா, சஞ்ஜா, ஹம்ஷா, மதுஷா, அபிஷேக், சஞ்சனா, சஞ்ஜயா, அபிராம், கோபிகா, கீர்திகா, தீபேஷ், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
திலகன் - 077 714 1475
குட்டி - 00447837782642

தகவல் :
குடும்பத்தினர்.



# பழைய வாகனங்கள் கொள்வனவுக்கு தேவை

வாகனங்கள் கொள்வனவுக்காக தேவை. 20 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அல்லது அதற்கு முற்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வாகனம் தேவை.
Volvo, Audi, BMW, Daihatsu, Subaru, Nissan, Toyota மற்றும் பல.
இது சம்பந்தமான தரகர்களை அறிமுகம் செய்பவர்களுக்கு சிறப்புக் கொடுப்பனவுண்டு. முகவர்களின் உதவிகள் அவசியம்.

தொடர்பு - 071 405 2835

## தமிழ்த் தேசியக் கட்சிகள்...

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்வியில் - பிளவில் நாம் மகிழ்ச்சியடைய முடியாது. அது தமிழ் மக்களுக்கே பலவீனம் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரான எம். கே. சிவாஜிலிங்கம் சென்னை சென்றுள்ளார். அங்கு அவரை தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளரான பகவான் சிங் தொடர்பு கொண்டு பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் இப்போது பேச்சுக்கு செல்லக்கூடாது. எங்களை ஏமாளியாக்கும் செயலை தலைவர் சம்பந்தன் செய்யக் கூடாது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வந்த பின்னர் - இரு வாரங்களின் பின்னர் இந்தச் சந்திப்பில் பங்கேற்கலாம். அதற்கான ஒரு களமாக நாளைய (இன்றைய) சந்திப்பை பயன்படுத்தலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்லும்போது தனியாகவோ அல்லது தமிழ் அரசுக் கட்சியாகவோ செல்லக்கூடாது. பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள 3 கட்சிகளுடன் கஜேந்திரகுமார் - விக்னேஸ்வரன் போன்றவர்களையும் இணைத்துச் செல்ல வேண்டும்.

ஜனாதிபதியுடன் பேசுவதற்கு முன்னர் அவர் அடிப்படையில் சில விடயங்களை செய்ய வேண்டும். அவர் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய விடயங்களை செய்ய வேண்டும். இங்கு நம்பகத்துக்கு உரிய விடயங்கள் என்று குறிப்பிடுவது யதார்த்தமான விடயங்களையே, அரசியல் கைதிகளை விடுவித்தல், வடக்கு, கிழக்கில் மகாவலி திட்டம் - வனவளத் திணைக்களம் முன்னெடுக்கப்படும் காணிகள் அபகரிப்பை நிறுத்துதல் போன்றவற்றை செய்ய வேண்டும்.

இந்தப் பேச்சுக்கு தமிழ் அரசுக் கட்சி தனியாக போகும் என்றால் அது அரசுக்கே வெற்றி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்தால் - பிளவுண்டால் அதில் நாம் மகிழ்ச்சியடைய முடியாது. ஏனெனில் அது தமிழ் மக்களுக்கே பலவீனம் - என்றார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நிலவும் ஒற்றுமையின்மை குறித்து பேசிய அவர்,

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து ஓடப் பார்க்கிறது. ரெலோவையும் புளொட்டையும் வெளியேற்ற வேண்டும் என்பதே சுமந்திரனின் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. சம்பந்தனின் வயது மூப்பை தொடர்ந்து சுமந்திரன் தலைமைப் பதவியை பெறுவதற்கு தடையாக இருப்பவர் ரெலோ தலைவர்தான். எனவே அவர்களை வெளியேற்றி விட்டு இலங்கை தமிழ் அரசுக் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் நடத்த முயல்கிறார்.

எனினும், இந்த முடிவு தமிழ் அரசுக் கட்சியின் முழுமையான முடிவு என்று கூறமுடியாது. ஆனாலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் பெரும்பான்மை சுமந்திரனுக்கு உள்ளது.

ஆனால், கூட்டமைப்புக்கு தற்போது இருக்கும் பலம் குறையுமானால் அது தமிழருக்கு பலவீனம். தற்போது தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கம் 13 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு குடையின் கீழ் செயல்பட வேண்டும். பொதுவான விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 கட்சிகளும் எங்கள் கட்சியின் விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் போன்றோர் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆர்ப்பாட்டத்தில் இணைந்ததைப் போன்று.

இந்தக் கட்சிகளும் - புலம்பெயர் தேசத்தவர்களும் - நாமும் இணைந்து ஒரே வேலையை முன்னெடுத்தால் மட்டுமே தீர்வு நோக்கி நாம் முன்னோக்கி செல்ல முடியும் - என்றும் கூறினார்.

## முடிந்தால்...

அதிகரிக்கும் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியாளர்களை போல் எந்த ஆட்சியாளர்களையும் நாட்டில் எப்போதும் கண்டதில்லை.

முன்பு நாம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடக்கும் சம்பவங்களை அறிந்துக்கொள்ள செய்திகளை பார்ப்பதுண்டு.

எனினும் தற்போது செய்திகள், செல்லிடப் பேசிகளில் குறுஞ் செய்திகள், வட்ஸ் அப்பில் வரும் செய்திகளை கண்டதும் நாம் அதிர்ச்சியடைகின்றோம்.

ஏன் அவை நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு தொடர்பான செய்திகள்.

குறுஞ் செய்தியில் பொருட்களில் விலையை அதிகரிக்கும், அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாத நிலைமை வரலாற்றில் என்றும் இருந்ததில்லை.

வர்த்தமானி அறிவித்தலுக்கு பதிலாக குறுஞ் செய்தி மூலம் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் யுகத்தை சுதந்திரத்திற்கு பின்னர் நான் பார்த்ததில்லை. அப்படியான வரலாறு உருவாகியுள்ளது.

ஜனாதிபதி நிறுவனங்களில் மேற்பார்வையிட செல்வதை நாம் பார்த்தோம். ஜனாதிபதி பல நிறுவனங்களுக்கு சென்றிருந்தார். அது தவறல்ல.

நாட்டின் பிரதானமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மேற்கொள்கின்றனவா இல்லையா என்பதை அறிய ஜனாதிபதி தனது காலத்தை செலவிட்டாரா என்ற கேள்வி உள்ளது.

ஜனாதிபதி இதற்கு பதிலாக சமையல் எரிவாயு, டீசல் போன்றவற்றை கொள்வனவு செய்ய மக்கள் வரிசைகளில் நிற்கும் இடங்களுக்கு சென்று பார்ப்பது நல்லது.

நான் சவால் விடுக்கின்றேன், அரசாங்கத்தின் அமைச்சர்கள் மக்கள் வரிசைகளில் நிற்கும் இந்த இடங்களுக்கு சென்று மக்களிடம் கருத்து கேட்டால், அவர்கள் எப்படி பதிலளிப்பார்கள் என்பதை காணலாம்-என்றார். (அ)

## இருப்பை தக்க...

கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

இந்த அரசில் எந்த வொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தனக்கான பெறும் பான்மை பலம் இல்லா மல் போய்விடும் என்ப தால் எதிரணி உறுப்பினர்களை வளைத்துப் போடவே தேசிய அரசமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. எனினும், தனது இருப்பை தக்கவைத்துக்கொள்ள அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. அரசில் இணைய எதிரணிகள் மறுப்பு தெரிவித்துள்ளன- என்றார். (அ)

## அமைச்சர்...

தெளிவுப்படுத்தாமை உட்பட மேலும் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்தே குறித்த பிரேரணையை கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

அரச கூட்டணிக்குள் மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், ஆளுந்தரப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை இழந்துள்ளது. சாதாரண பெரும்பான்மைகூட ஊசலாடும் மட்டத்திலேயே உள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பிரதான எதிரணி இப்படியொரு வியூகத்தை கையாள எதிர்ப்பார்த்துள்ளது. (அ)

## மின்வெட்டு...

வரை ஒரு மணி 15 நிமிடங்களும் மின்வெட்டு இருக்கும்.

அதே நேரத்தில் பி முதல் டபிள்யூ வரையான வலயங்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை 2 மணி நேரமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை ஒரு மணி நேர மின்வெட்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சி

நியூயோர்க், மார்ச் 15

உக்ரைன் - ரஷ்ய போரைத் தொடர்ந்து சடுதியாக உயர்ந்த எண்ணெய் விலை - கடந்த இரு வாரங்களில் இல்லாதளவு 8 வீதத்ததால் நேற்று வீழ்ச்சியடைந்தது. ரஷ்யாவும் - உக்ரைனும் தங்கள் மோதலை இராஜதந்திர ரீதியில் முடிவுக்கு கொண்டுவருவது போல் தோன்றியதாலேயே எண்ணெயின் விலை வீழ்ச்சியடைந்தது.

நேற்றைய தினம் ஒரு பீப்பாய் கச்சா எண்யெின் விலை 8.74 டொலர்களால் குறைவடைந்து 100.59 டொலர்களாகக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டிப்பர் சாரதிகள் கைது

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் நட்டாங்கண்டல் முறையற்ற அனுமதியை பயன்படுத்தி மணல் ஏற்றி சென்ற இரு டிப்பர்களின் சாரதிகள், பொலிஸ் காவலரணில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சாரதிகள் இருவரும், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் நாளை புதன்கிழமை அவர்ள் முன்னிலைப்படுத்ப்படுவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாந்தை கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்தும் மணல் வளங்கள் அகழப்பட்டு, ஏற்றப்படுகின்றன என்று, பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பொது மக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்தக் கைது இடம் பெற்றுள்ளது. (ஐ)

# பஸில் ஒதுங்கவேண்டும் ஆனந்த தேரர் ஆலோசனை!

கொழும்பு, மார்ச் 15

“நீங்கள் நிதி அமைச்சராக பதவியேற்ற பின்னரே, நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன என்று மக்கள் கருதுகின்றனர். எனவே, ஆறு மாதங்களுக்காகவது அரசியலில் இருந்து ஒதுங்கி இருங்கள்.” - இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் அபயராமை விகாரையின் விகாராதிபதியான முருத்தெட்டுவே ஆனந்த தேரர்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என பலரும் கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். குறிப்பாக நிதி அமைச்சராக பஸில் ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னரே நிலைமை மோசமடைந்துவிட்டது என மக்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இது சாபமோ என்னவோ தெரியவில்லை, மக்கள் கருதுவது உண்மையெனில், அரசியலில் இருந்து ஆறு மாதங்களாவது நிதி அமைச்சர் ஒதுங்கி இருக்க வேண்டும். நாடு மோசமான கட்டத்தில் உள்ளது. அரசுமீது மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.” - என்றார். (ஐ)

## பேனா, பென்சில்...

யுள்ளனர்.

இதேவேளை, சந்தையில் காகிதாதிகளின் விலையும் தற்போது அதிகரித்துள்ளது.

காகிதத் தட்டுப்பாடு காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் அதிவிசேட வர்த்தமானியோ அல்லது சாதாரண வர்த்தமானியோ வெளியிடுவதில் சிக்கல் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தீவிரவாத...

இறக்குமதிக்கு செலுத்துவதற்கு கடினமான நாணய (டொலர்) தட்டுப்பாடு காரணமாக மருந்துகள், எரிபொருள் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளின் பற்றாக்குறையுடன் இலங்கையில் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகின்றது. மின்சாரம் தடைப்படலாம். நாடு முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது என்றும் இங்கிலாந்து அரசாங்கம் எச்சரித்துள்ளது.

பிரிட்டனின் இந்த அறிவிப்புக் குறித்து இலங்கை அரசு சார்பில் கண்டனம் தெரிவிக்கபாபட்டிருக்கிறது.

கோவில் தொற்று பூரண கட்டுப்பாட்டில் இருக்கும்போது குறுகிய அவகாசத்தில் விமானங்கள் ரத்துச் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப் பட்டிருப்பது இந்த அறிவிப்பின் நம்பகத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது என்று சுற்றுலாத்துறை யைப் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## தமிழ்த் தேசியக்...

திப்பில் தமிழ் அரசுக் கட்சியினர் பங்கேற்கும் அதேவேளை, புளொட் கட்சியும் பங்கேற்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமிழகத்துக்கு சென்றிருப்பதால் அவர் பங்கேற்க மாட்டார் என்று அறிய வருகின்றது. எனினும், அந்தக் கட்சியின் மற்றைய உறுப்பினர்கள் பங்கேற்பார்களா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்தக் கூட்டத்தை ரெலோ உறுப்பினர்கள் புறக்கணிப்பர் என்றே அந்தக் கட்சியின் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே, ஜனாதிபதியுடனான சந்திப்பை நிராகரிக்குமாறு அல்லது நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தும்வரை பிற்போடுமாறு ரெலோ கட்சி ஏற்கனவே கோரியிருந்த நிலையில் இந்த சந்திப்பு இடம்பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டமைப்பை...

மற்றொரு பங்காளிக் கட்சியான புளொட்டின் நிலைப்பாடு இன்று காலையே தெரியும் என்ற போதிலும் அந்தக் கட்சியும் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன என்று அறிய வருகின்றது.

இந்த நிலையில், இந்தப் பேச்சில் பேசப்படும் விடயங்கள் குறித்து இன்று காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடிக் கலந்துரையாடவுள்ளது.

முக்கியமாக, வடக்கு - கிழக்கில் மகாவலி அபிவிருத்தி, வனவளத் திணைக்களம், மற்றும் தொல்பொருள் திணைக்களங்கள் மூலமாக முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, புதிய அரசமைப்பு விவகாரம் என்பன குறித்துப் பேசப்படவுள்ளன என்று அறிய வருகின்றது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மகாவலி அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ஷவும் பங்கேற்பார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## சர்வதேச நாணயப் பிரதிநிதி நிதி அமைச்சருடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச் 15

இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி நேற்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினாரென தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் சாங்யொங் றிஹி, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளரான எஸ். ஆர். ஆட்டிகலவை கொழும்பில் சந்தித்தாரென றொய்ட்டர்ஸ் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின் போது சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொருளாதார மீளாய்வு தொடர்பில் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## மண்டைதீவு றோ. க. த. கவில் புலமைப்பரிசிலில் 8 பேர் சித்தி!

யாழ்ப்பாணம், மார்ச் 15

மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை சேர்ந்த 8 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசிலில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

நிசாந்தன் நிதர்சன் என்ற மாணவர் 183 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தவிர, அன்ரனி நீக்லாஸ் நிவேதனா 181, சீன் கொன்றி மரியற்றோசியா 168, அன்ரனி சந்திரகுமார் விஜிதரன் 164, கிறிஸ்துராசா கிறிஸ்ரில்டா 158, டைமன் ஜெயசீலன் டிலக்சன் 157, ஜெனிதாஸ் ஜெனில்டா 152, ஜோன்ஜெனி ஜெனிஸ்ரன் 149 ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர். (ஐ)

## நெருக்கடிகளை தீர்ப்பதற்கு தேசிய அரசால் பயனில்லை

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 15

நிலவும் நெருக்கடிகளை தீர்க்க தேசிய அரசாங்கத்தை அமைப்பதில் எந்த பயனும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சேர்க்கை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை உயர்த்துவதற்கு அனைத்து தரப்புக்களுக்கும் இடையில் ஒரு தேசிய உடன்பாடு தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாட்டின் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்ததில்லை. நெருக்கடிக்குத் தீர்வு காண அரசாங்கம் அதிக நேரத்தைச் செலவிட்டுள்ளதுடன், தீர்வுகளை வழங்கத் தவறியதால், நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

நிதியமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கும் இடையில் முரண்பாடு இருக்கிறது. அதனை அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும், அது இதுவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அரசாங்கங்களை கவிழ்ப்பதற்கு பதிலாக தற்போதுள்ள நிலைமைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

கட்சி வேறுபாடுகள் எதுவாக இருந்தாலும், நெருக்கடியை தீர்க்க தவறினால் அடுத்த சில மாதங்களில் மக்கள் நாட்டை இழக்க நேரிடும்.

நாடு பாதுகாக்கப்பட்டு முன்னோக்கி கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும், மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கும் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பாகவும் அனைத்துத் தரப்பினருக்கும் இடையில் வலுவான உடன்பாடு எட்டப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# சர்வதேச நாணய நிதிய அறிக்கை இடர்களை மிகைப்படுத்தியுள்ளது!

### பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்



**கொழும்பு, மார்ச் 15**

**இலங்கையின் பொருளாதாரம் தொடர் பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் சில இடர்கள் மிகைப் படுத்தப்பட்டுள்ளன என்று நிதியமைச்சு அமைச் சரவையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

சில இடர்களை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு இறுதிக்குள் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் 11 பில்லியன் டொலர்களாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உணவுப் பணவீக்கம் 25வீதமாக உள்ளதாகவும், அதனைக் குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நிதி அமைச்சர் கூறினார்.

தேவை அடிப்படையிலான பணவீக்க அழுத்தங்களைக் குறைப்பதற்காக இலங்கை மத்திய வங்கி கடுமையான நாணயக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் முதலீடு செய்யுமாறு சவுதி அரசுக்கு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, மார்ச் 15

பல்வேறு துறைகளில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ளுமாறு சவுதி அரசுக்கு அழைப்பு விடுப்பதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் ஸஊத்துக்கு தெரிவித்தார்.

சவுதி அரேபியாவின் வெளிநாட்டு அமைச்சருடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி, தொழிநுட்ப மேம்பாடு மற்றும் துறைமுக நகர் சார்ந்த வெளிநாட்டு முதலீடுகளுக்கான வாய்ப்புகள் குறித்து ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

கோவிட் தொற்றுநோயின் காரணமாக, இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பில், இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் ஸஊத் அவதானம் செலுத்தினார். பரிமாற்றங்கள் குறைதல், சுற்றுலாத் துறையின் வீழ்ச்சி, மின் உற்பத்தியில் வறட்சியான காலநிலையின் தாக்கம் மற்றும் ஏற்பட்டுள்ள எரிபொருளுக்கான தேவை பற்றியும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

தமது நாடும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்ட சவுதி வெளிநாட்டு அமைச்சர், இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ஐ)








## பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
- துடிப்பும் துணிவும் உள்ள
- செய்தித்துறையில் விருப்புள்ள
- சாதிக்கும் எண்ணம் கொண்ட

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நேபாளி,சத்தியம் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா



6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரபடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு